உ

மயிலைச் சிலேடை வெண்பா



By

இராதாகிருஷ்ணய்யர், M. A., B. O. L.,

16—9—1957.

சிவமயம்.

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை.

மயிலைச் சிலேடை வெண்பா.

கண்டரமாணிக்கம் ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப்
பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்

க. ரா. இராதாகிருஷ்ணய்யர் M.A.B.O.L.

அவர்களால் இயற்றப்பட்டு

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவானும்
கோவை அரசியலார் கல்லூரித் தலைமைத்தமிழாசிரியரா
யிருந்தவருமாகிய

பண்டித. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

இராமநாதபுரம் ஜில்லா கண்டரமாணிக்கம்
ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளி ஸ்தாபகர்

திருவாளர் பெரி. பெரி. சுப.

பெரியகருப்பன் செட்டியாரவர்களால்

மதுரை ஹரிஸமய திவாகரம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

துர்முகி ஆண்டு] 1957. [விலை அணா 10.

உ

சிவமயம்.

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை.

முகவுரை.

திருத்தலங்கள் பலவற்றிற்குச் "சிலேடை வெண்பா" அமைந்திருத்தலை எண்ணித் திருமயிலைக்கும் ஒன்று அமைதல் பொருத்தமே எனக்கருதி, அடியேன் அத்தலத்தில் வசித்துவந்த காலத்தில் இயற்றியதாகும் "இத்திருமயிலைச் சிலேடை வெண்பா" என்னும் நூல். இஃதியற்றிப் பத்தாண்டுகள் ஆகின்றன. இதனை அச்சிற் பதிப்பித்தற்கு இறைவன் திருவருள் கைகூட்ட இராமநாதபுரம் ஜில்லா கண்டரமாணிக்கம் ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளியின் ஸ்தாபகரும், தெய்வபக்தி தர்மசீலம் உதாரசுபாவம் தமிழபிமானம் தமிழ்ப்புலமை முதலிய நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவருமாகிய பேரி. பேரி. சுப. பேரியகருப்பன் சேட்டியாரவர்கள், தாம் இந்நூலை அச்சிட்டுத்தருவதாக வாக்களித்துச் சிறிதும் தாழ்க்காமல் அங்ஙனமே அச்சிற் பதிப்பித்துதவினார்கள். இப்பேருபகாரத்தை என்றென்றும் நினைந்து நினைந்து மகிழ்ச்சி கூரவும், அதன்காரணமாக அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கவும், கடமைப்பட்டுள்ளேன். அன்னாரும் அவரது குடும்பமும் வாழையடிவாழையெனத் தழைத்தோங்கவும், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்

பெற்று நீடூழிவாழவும் எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாஞக.

இந்நூலுக்குச் சாத்துகவி தந்துதவும் வண்ணம் பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களையும், பண்டித. நா. கனகராஜய்யர் B.O.L. அவர்களையும், தமிழ்ச்சங்கவித்து வானும் ஆயுர்வேத பண்டிதருமாகிய கோவை திருமலை இராமஸ்வாமி அய்யங்காரவர்களையும் கேட்டுக்கொண்ட வண்ணம் உடனே அங்ஙனம் சாத்துகவிகள் அளித்துதவிய அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகும்.

இந்நூலுக்கு வடமொழியில் சாத்துக்கவி இயற்றித் தந்தவரும் பிரபல ஜோதிஷ வித்துவானும் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிப் புலமையுடையவரும் இந்நூல் விரைவில் அச்சாகி வெளிவருவதற்கு உடனிருந்து வேண்டிய முயற்சிகளைச் செய்தவரும் இந்நூலாசிரியரிடம் தமிழ்ப்பாடங்கற்றவருமான கண்டரமாணிக்கம் ஸ்ரீ நா. அனந்தகிருஷ்ணய்யங்காரவர்கட்கும் இந்நூலை விரைவிலும் நன்முறையிலும் பதிப்பித்துத் தந்த "ஹரிஸமய திவாகரம்" பிரஸ் மானேஜர் உரிமையாளருக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை.

இங்ஙனம்,

க. ரா. இராதாகிருஷ்ணன், M.A.B.O.L.

S. D. H. ஸ்கூல்,

1-3-1957. கண்டரமாணிக்கம்,

இராமநாதபுரம் ஜில்லா.

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும், கோவை அரசியலார்
கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராயிருந்தவருமாகிய

பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்

இயற்றிய

சாத்துகவி.

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(1) தலையினை யளித்துந் தண்டமிழ் புரந்த
தகைமைசால் கொங்குநன் னாடன்
மலைவிலாக் கோவை மாநகர் வாழ்வோன்
வழுவிலந் தணகுல திலகன்
கலையுணர் நுண்மா ணுழைபுல முடையோன்
கருதுமாங் கிலமுநன் கறிந்தோன்
நிலைமன முடையோன் பரனடி மறவா
நேர்மையன் புனிதநல் லொழுக்கன்

(2) தனைநிக ரிராதாக் கிருட்டின நாமச்
சான்றவன் தெளிதமிழ் வாக்மி
கனிவரு மன்பின் மயிலையம் பதியிற்
கபாலியார் கழற்குயர் சிலேடை
நனிவரு வெண்பா மாலைநூல் சாத்தி
நாட்டினர்க் குதவினன் பலநூற்
றினிதுணர் பன்மாண் பொருளெலாந் தொகுத்தே
யின்சுவை ததும்பிட மாதோ,

புதுக்கோட்டை மஹாராஜா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரா யிருந்து ஓய்வுபெற்றுத் தற்போது இராமேசுவரம் தேவஸ்தானம் சம்ஸ்க்ருத பாடசாலை (மதுரை)த் தமிழ்ப்பேராசிரியராய் இருந்துவரும்

பண்டித பிரும்மஸ்ரீ நா. கனகராஜையர்,

வித்வான், B. O. L., அவர்கள் பாடியருளிய

சாத்துகவிகள்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

(1) வேண்டியவர் வேண்டியவா றருள்பொழியும்
பரம்பொருளின் விமல பாதத்
தீண்டியமெய் யன்புடையான் மும்மொழிநாற்
புலமைசெறி யிராதா க்ருஷ்ணன்
பாண்டியநன் னாட்டிலுள பதுமகிரிச்
சாரலிலே பழமை மேன்மை
பூண்டியலு மாற்றாரிற் பூசுரர்தங்
குலத்துதித்த புலமை யாளன்.

(2) பண்புமலி மரபுடைய கந்தாடை யிராமகிருஷ்ண
பனவர் மைந்தன்
நண்புமலி சிறப்புரிமை யளியேற்கு முவந்துதவு
நலஞ்சால் செல்வன்
பெண்பொலியுங் கற்பகத்தை யிடத்திருத்தும்
திருமயிலைப் பெம்மான் மீது
தண்பொருளின் கோவையுறு சிலேடைவெண்பா
வுளமிகவே நவன்று னன்றே,

(3) கையுள்வரு மாமலகக் கனியெனவே கண்ணுதலான்
கருணைப் பேற்றைப்
பொய்யுள்வரு மெய்யெனவே பெறமுயலும்
பொருள்வணிகன் புகழ்சால் செம்மல்
மெய்யுள்வரு கலைவளர்க்கும் பெரி. பெரிய கருப்ப
னெனும் வியன்பே ராளன்
பையுள்தவிர் சிவனருளே நினைந்தன்றே யதனையச்சிற்
பதிப்பித் தானே.

(4) உதிப்பித்தல் பனுவலொன்றை யெளிதன்றே
யுரிமையினு லுதித்த வொன்றை
மதிப்பித்தல் புலவரிடை யெளிதன்றே
யவர்மகிழ்ந்து மதித்தா ரேனும்
துதிப்பித்தல் உலகுகொளப் பரப்புவித்தல்
மிகவரிதே துணிந்திப் பாடல்
பதிப்பித்தல் அறமெனவே துணிந்தவற்கும்
புலவனுக்கும் பல்கும் வாழ்வே.

நா. கனகராஜன்.

24—12—1956

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும் ஆயுர்வேத பண்டிதருமாகிய

கோவைநகர் திருமலை ராமஸ்வாமி அய்யங்கார்

அவர்கள் பாடியருளிய

சாத்துகவி.

நேரிசை வெண்பா.

1. வால்வளை முத்தமீனும் வான்கோவை மாமறையோன்
சேல்விழிரா தாகிருஷ்ணச் சீர்கவிஞன்—மால்மயிலை
வாழ்பரன்மேல் வெண்பாச் சிலேடையா மாலைதந்தா
ஏழ்புவியு மேத்த வினிது. [ன்

2. இயற்றமி ழைந்திணையு மீர்பொருளு மெண்ணிக்
குயிற்றியணி நாற்பாலுங் கொண்டு—பயிற்றிறனை
என்னென்பா மேதிணையா மோர்கம்பன் வள்ளுவரும்
முன்னிருந்தா ரின்று மிவன்.

श्रीः ।

கண்டரமாணிக்கம் பரம்பரை ஜோதிட வித்துவானும்
வடமொழி தென்மொழியாகிய இருமொழிப்
புலமை வாய்ந்தவருமான

நா. அனந்தகிருஷ்ணய்யங்காரவர்கள்

வடமொழியிலியற்றிய

சாத்துகவிகள்.

---

(1)

आत्त्रूरित्युपनामकं जनपदं श्रीराघवांबापुरं
श्रीमत्पद्मगिरेर्निकामनिकटं जन्मस्थलं प्रापितः ।
वापी कूप तटाक शैल निवहैरभ्रंकषैर्मन्दिरै-
र्नित्यं देव व शङ्करैर्द्विजवरैश्चासेवितं भक्तितः ॥

இதன் பொருள்:— பதுமகிரிக்கருகில் வானளாவிய மனைகள்; வாவி கூவம் தடாகம் இவைகளாற் சூழப்பட்டதும், அனுதினம் பக்தி மேம்பாட்டால் இறைவனைப் பரவசமாக்கும் அந்தணர்களால் நிரம்பப் பெற்றதும் ஆத்தூரென்னும் மறுபெயர் கொண்டதுமான இராகவாம்பாள்புரமென்னும் நகரத்தைத் தனது ஜன்ம பூமியாகக் கிடைக்கப் பெற்றவரும்,

(2)

परिसरभुवि यस्याः स्वच्छतोया पवित्रा
प्रवहति कुटवाख्या पश्चिमातस्स्रवन्ती ।
परमपद विभूतिं भावयन्ती पुरी या
पुलकयति मुदं नः पूरणौपम्य रम्या ॥

(இ+ள்.) எந்த நகரத்தினருகில் தெளிந்த நீருடன் கூடியதாயும், பரிசுத்தமானதாயுமுள்ள குடவனுறு மேற்குத் திசையிலிருந்து பிரவகித்து ஓடுவதால் வைகுண்டம் சுவர்க்கம் இவைகளின் விபூதியைக் காண்பித்தும் தனக்குத்தானே நிகராயுமுள்ளதோ மேற்கூறிய அந்நகரம் நமக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணுறெது.

(3)

श्रीमत्पर्वतवर्धनीति महिता माता सुतं सुप्रजा
राधाकृष्ण ममुं कलासु कुशलं श्री राम कृष्णस्सुधीः ।
नीतिज्ञस्सुषुवे जितेन्द्रिय चयं यं काव्यशोभाकरं
बी. ओ. एल्लिति सुप्रसिद्ध बिरुदं स्वध्यापकाग्रेसरम् ॥

(இ+ள்.) எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவரும் ஐம்புலன்களையுமடக்கினவரும் இலக்கியங்களுக்குப் பிரகாசத்தைத் தருபவரும் பி. ஒ. எல். என்ற சிறப்பான பட்டம் பெற்றவரும் நல்லாசிரியருட் சிறந்தவரும் இராதா கிருஷ்ண னென்னும் பெயர் பூண்டவருமான எவரை நீதியறிந்தவரும் நல்லறிவு முடையவருமான

ஸ்ரீ இராமகிருஷ்ணய்ய ரென்பவரும் நற்குணம் பொருந்தியவளும் நற்புதல்வர்களையுடையவளுமாகிய பருவதவர்த்தனி யென்னும் அம்மையாரும் ஈன்றனரோ.

(4)

अज्ञानाख्य तमोऽपहा भुवि नृणां चन्द्रं हसन्ती दिवि
यत्कीर्तिः कविराजमण्डलगणे छत्रीकृता निर्मला ।
येनोत्तुङ्ग कुलोद्भवेन विदुषा वंशोन्नतिं प्रापिता
वाधूलान्वय दुग्ध सिन्धु रजनीनाथश्चिरं जीयताम् ॥

(இ+ள்.) பூவுலகிலுள்ள மானிடர்களின் அஞ்ஞானமென்னு மிருளைப்போக்குகிற எவருடைய நிர்மலமான புகழ் ஆகாயத்தில் சென்று மதியை ஏளனம் செய்கிறதோ, கவியரசர்கள் கூட்டமாகிற இராச்சியத்துக்குக் குடைபோலுள்ளதோ எந்த உயர்ந்த குலத்தில் தோன்றிய அறிஞரால் தன் குலத்திற்கே பெருமை ஏற்பட்டதோ அப்படிப்பட்ட வாதூலவம்சமாகிய திருப்பாற்கடலுக்கு மதிபோல் விளங்காநின்ற இராதா கிருஷ்ணய்யர் நீடூழி காலம் வாழட்டும்.

(5)

तेनेदं कृतमद्भुतं सुचरितं मायूरनाथात्मकम्
काव्यं श्लिष्टमनोहरैस्सुमनसां तोषावहं ज्ञानदम् ।
चातुर्वर्ग्य फलप्रदं मनुभुवां श्रोतृत्वसंकीर्तना-
दन्त गूढ रसोदयै र्बहुविधैः पद्यैस्सुधी रंजकम् ॥

(இ+ள்.) மேற்கூறப்பட்ட வித்துவானுல், நற்சரிதங்களோடு கூடியதாயும் அதனுலே அறிஞர்களுக்கும் தேவர்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதாயும் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயும் நல்லறிவைப் புகட்டக்கூடியதாயும் பூவுலகிலுள்ள மானிடர்கள் கேட்டலாலும் படித்தலாலும் அறம் பொருள் இன்பம் வீடென்ற நான்குவித புருஷார்த்தங்களைக் கொடுக்கக்கூடியதாயும், உள்ளே மறைந்து புதைந்து கிடக்கின்ற சுவையின் தோற்றம் (நாரி கேள பாகம்) உடைய, சிலேடை மொழிகளால் மனதைக் கவரக்கூடிய பல வெண்பாக்களால் அறிஞர்களுக்குக் களிப்பூட்டக்கூடியதாயுமுள்ள மயிலைச்சிலேடை வெண்பா வென்னும் காப்பியம் செய்யப்பட்டது.

(6)

श्री दण्डायुधपाणि मङ्गल कलाशालाधि कर्ता विभुः
प्रादुर्भूत इहापरः कलियुगे कर्णः प्रदाता भुवि ।
बालानां पितृतां गतोऽय ममलो विद्याप्रदानात्पुरे
स्वीये कण्डर पूर्वके गुणवरे माणिक्यनाम्नि स्वयम् ॥

(இ+ள்.) எந்தப் பிரபு நற்குணம் பொருந்திய கண்டரமாணிக்க மென்னும் தன் நகரில் தானே ஸ்ரீ தண்டாயுதபாணி என்னும் சிறந்த உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தி பாலர்களுக்குக் கல்வி கற்பித்தலால் தகப்பனுராக விளங்குகிருரோ, எவர் இக்கலியுகத்தில் மறுகர்ணனுகவே கொடை கொடுக்கத் தோன்றியிருக்கிருரோ.

(7)

औदार्यं त्वयि धीरता त्वयि कलासंपत्त्वयि श्रीस्त्वयी-
त्येवं यं कथयन्ति सर्व विबुधा स्सत्कीर्तिमन्तं नरं ।
सुब्रह्मण्यतनूज एष महितं यत्काव्य रत्नं मुदा
मुद्रायन्त्र गृहे प्रकाशितमिदं चक्रे बुधैर्लालित्तम् ॥

(இ+ள்) எந்த நற்புகழ்பெற்ற செட்டியாரை எல்லா அறிஞர்களும் கொடையு முன்னிடத்தில் தீரத்தன்மையு முன்னிடத்தில் கலைச்செல்வமு முன்னிடத்தில் இலக்குமியு முன்னிடத்தில் என்று கூறுகிறார்களோ எந்த சுப்பிரமணியன் செட்டியார் குமாரர், இராதாகிருஷ்ணய்யரா லியற்றப்பட்ட மயிலைச் சிலேடை வெண்பா வென்னும் மேற்கூறப்பட்ட காப்பியத்தை அச்சிலியற்றி அறிஞர் புகழச்செய்து உதவினாரோ.

(8)

महदिति पदपूर्व श्री करुप्पोपनामा
प्रथित गुणगणश्च श्री जगन्नाथ नाम्ना ।
द्रविडभणिति वेत्ता वैश्य वंशाब्धि चन्द्रः
प्रविलसतु धरण्यां सोऽयमाचन्द्रसूर्यम् ॥

(இ+ள்.) அந்தப் பெரியகருப்ப னென்னும் மறு பெயர் கொண்டவரும் ஜகன்னாத னென்னும் பெயரால் பிரசித்தி வாய்ந்தவரும் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தவரும் வைசியர் குலமாகிய கடலுக்கு மதிபோல் பிரகா

சிக்கிறவருமாகிய செட்டியார் இவ்வுலகில் சூரியசந்திர ருள்ளகாலம் வரை நீடூழி வாழ்வாராக.

(9)

यत्काव्यस्य विचारणेन विदुषां ज्ञानं समुज्जृम्भते
वाक्चातुर्य यशः प्रदं सुखकरं वाग्देवता सिद्धिदम् ।
यावद्विन्ध्य हिमाचला वुडुपतिर्यावद्दिनेशो मरु-
त्तावद्भातु महीतलेषु महितं मायूरकाव्यं चिरात् ॥

(இ+ள்.) எந்தக் காப்பியத்தை ஆராய்ச்சி செய்த லால் அறிஞர்களுக்கு அறிவு வளர்ச்சி யடைகிறதோ, வாக்குவன்மை, புகழ், நன்மை, சரஸ்வதீ கடாட்சம் உண்டாகிறதோ அந்த மயிலைச் சிலேடை வெண்பா வென்னும் காப்பியம் விந்தியமலை இமயமலை சூரியசந்திரர்களுள்ள காலம்வரை இப்புவியில் விளங்கட்டும்.

ஷை நா. அனந்தகிருஷ்ணய்யங்காரவர்கள்

தமிழ் மொழியிலியற்றிய

சாத்துகவிகள்.

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

1. காவியமொன் றியற்றுதல்தான் கடவுளருள்
பெற்றதாலாம் கருது நான்கென்
தேவியல்தேர் பொருட்பயனும் திரநிலையும்
உலகுய்யுஞ் சிறந்த நோக்கும்
கோவியல்சேர் முதியவரும் இளையவரும்
கற்றிடுநற் குணமுங் கொண்ட
பாவியல்முற் றுளமயிலைச் சிலேடைவெண்
பாநூலைப் பகர்ந்தார் நன்றாய்

2. ஆரியமு முத்தமிழு மாங்கிலமும்
நன்கறிந்தோ ரரிய ஞானச்
சீரியநற் றவவொழுக்க மொடினியபண்
புளவாக்மி திகழென் ஆசான்
பேரியன்ற இராதாக்ருஷ்ணன் மற்றதனைத்
தருமகுணப் பிரபு வான
ஓரியல்சேர் உத்தமனுஞ் ஜகந்நாத
வணிகரச்சிட் டுதவி னாரே.

அவையடக்கம்.

ஊரங் கணநீரு முட்கொளும் பான்மைத்தால்
தீரங் கெழுகங்கை சேர்ந்திடுமேல்—ஒரும்
புலவரவை சேர்ந்தெனது புன்னூலும் நன்னூலாய்
நலவரவை யேற்றிடும் நன்கு.

அங்கணம்—சலதாரை. தீரம்கெழு—கரை பொருந்திய. ஒரும்—ஆராய்கின்ற. நல—நல்ல.

காப்பு.

மன்னுசீர் மிக்க மயிலைவெண் பாச்சிலேடை
என்னிதயத் துண்ணின் றினிதெழுமே—கன்னலுகைக்
குஞ்சரமு கத்தனருள் கூடியருள் கூத்தாடு
குஞ்சரமு கத்தனருள் கொண்டு.

கன்னல் உகைக்கும் சரம் உகு அத்தன் அருள் கூடி அருள் — கரும்பாகிய வில்லினின்றும் மன்மதன் எய்த புஷ்பபாணங்கள் பயனற்றனவாகக் கீழே விழுமாறுசெய்த சிவபெருமானும் சத்தியாகிய உமாதேவியும் சேர்ந்து தந்தருளிய. கூத்தாடு குஞ்சர முகத்தன் — கூத்தாடிப் பிள்ளையாராகிய யானைமுகக் கடவுள். நர்த்தன விநாயகர் என்பது தலவிநாயகரது திருநாமம்.

உ

மயிலைச் சிலேடை வெண்பா.

நூல்.

(1) மங்கையர்க்கும்—வருணனுக்கும்

திங்கணுத லாரகத்துந் தேவருணற் சேர்ப்பனுமன்
மங்கலஞ் செய்யு மயிலையே—துங்கமிகு
மாமனு வந்தான் மதுரைக்கண் வாழ்வணிகன்
மாமனு வந்தான் மனே.

அகம்=வீடு. தேவருணன்—வருணதேவன். சேர்ப்பன்—நெய்தல் நிலத்தலைவன். மன்=நிலைபெற்ற; மிகுதியாக. மங்கலம்=தருமம்; வாழ்த்து. மாமன்=குதிரைச் சேவகன்; தாயுடன் பிறந்தோன். மூன்றும் அடியில் 'மாமன்' என்பதற்குப் பெருமை பொருந்திய சோமசுந்தர பாண்டியன் என்னும் அரசன் என்றும் பொருள் கொள்ளலாம். பின்வரும் செய்யுள்களைக் காண்க :—

"அதிர்விடைக்கொடியங்கயற்கொடியாசவராக்கலன்பொற்கலனுகப்
பொதியவிழ்கடுக்கைவேம்புலராகப்புலியதள்பொலந்துகிலாக
மதிமுடிவைரமணிமுடியாகமறைகிடந்தலம்புமாமதுரைப்
பதியுறைசோமசுந்தரக்கடவுள்பாண்டியனுகிவீற்றிருந்தான்.
(திருவிளை. திருமணப்.....194)

"அண்டமெலா மாதார மாகத்தாங்கு மானந்தத் தனிச்சோதி
யண்டந்தாங்குஞ்–சண்டமறைப் பரிதனக்கா தாரமாகித் தரிக்க

வொரு காலத்து மசைவிலாத-புண்டரிகத் தாளசையப் பாச நீக்கும் புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக்—கொண் டரச னெதிர்போந்து மன்னு வெங்கள் குதிரையேற்றஞ்சிறிது-காண்டி யென்ருர். (நரிபரியாக்கியபடலம்-76)

அறத்தவி சிருப்போரேவ லாடவ ரோடும் போந்து
மறித்தலைக் களத்திற் கூட்டி வந்தனள் வந்தவெல்லை
யறக்கொடி பாகர் வெள்ளி யம்பலவாணர் தாமத்
திறத்தன பதியே யென்னத் திருவுருக் கொண்டு செல்வார்.

(மாமனுகவந்து வழக்குரைத்த—17)

(2) வாயிலார் நாயனுருக்கும் — மாளிகைக்கும்

கோயிலகத் தன்புடனுங் கோச்செல்வர் மாளிகையும்
வாயிலார் நீங்கா மயிலேயே—தாயிலார்
தந்தையி லார்வார்தஞ் சந்தருவா ரன்புருவாஞ்
சிந்தையி லார்வார்தஞ் சேர்வு.

கோச்செல்வர்—அரசச் செல்வமுடையவர். (1) வாயிலார்—வாயிலார் நாயனுர். வாயிலார் நாயனுரது வரலாற்றைப் பெரிய புராணத்தில் கறைக்கண்டன் சருக்கத்தில் கண்டறிக. (2) வாயிலார்—வாயில் காப்போர். வார்தஞ்சம்—நீண்ட அடைக்கலம். ஆர்வார்—நிறைந்திருப்பவர். இச்செய்யுளின் பயன்:— இறைவனை உள்ளத்தின்கண் கள்ளமகற்றி உணர்வும், ஊனும், உயிரும் ஒரு நெறிப்பட்டு அன்பால் என்புருக நெக்குநின்று வழிபடுதல். வாயிலார் நாயனுர் இறைவனை வழிபட்ட முறை பின் வருமாறு:—

"மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
யிறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச்சனைசெய்வார்."

(வாயிலார் நாயனார்—8)

(3) திருவிளக்கிற்கும் — நூலுக்கும்

**பாழியினெய் வார்விளக்கும் பல்கலைதேர் வார்நூலும்
வாழியரங் கேற்று மயிலையே—காழியர்க்கா
அங்கம் பெண் ணாக்கினார் அங்கம் பெண் ணாக்கினார்
உங்கம் பெண் ணாக்கினா ரூர்.**

பாழி—ஆலயம். தேர்வார்—ஆராய்வோர். நூல்—காவியங்கள். வாழியர்—வாழும் வண்ணம். வாழி—வாழி எனக்கூறி. அரங்கேற்றும்—கற்றோரவை ஏற்றுக்கொள்ளச் செய்யும். காழியர்—திருஞானசம்பந்தர். அங்கம்—எலும்பு; உடல். உங்கு—திரிபுரமெரித்த இடம் அல்லது காலம். அம்பு—வாளி. எண் = எட்டு = அ = விஷ்ணு. அங்கம் பூம்பாவையானது:—

"எடுத்த பாட்டினில் வடிவுபெற்றிருநான்கு திருப்பாட்
டடுத்த வம்முறைப் பன்னிரண் டாண்டள் வணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விதித்தார்."

(திருஞான......1091)

**மண்ணி னிற்பிறந்தார்பெறும் பயன்மதி சூடு
மண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்த
லுண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்.**

மன்னு வார்சடை யாரைமுன் றெழுதுமட் டிட்ட
வென்னு நற்பதி கத்தினிற் போதியோ வென்னு
மன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதமவ் வங்கந்
துன்ன வந்துவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள்.
(டி—1087,—88.)

(4) புலவர்க்கும் — வண்டிற்கும்

துன்றுசுவைப் பைந்தமிழ்தேர் சொற்புலவ ருஞ்சுரும்பும்
மன்றலங்கா ரஞ்சேர் மயிலையே—என்றும்
மயிலையுருத் தான்கொண்ட மங்கலைபுன் னுகன்
எயிலையுருத் தாண்கொண்ட இல்.

பைந்தமிழ்—குளிர்ந்த தமிழ். சுரும்பு—ஆண்வண்டு. மன்று அலங்காரம் சேர் — சபைக்கு அணியாகச் சேர்கின்ற. மன்றல் அங்கு ஆரம் சேர் — வாசனையால் அவ்விடத்திலுள்ள பூமாலைகளை அடைகின்ற. மயில் ஐ உரு—மயிலினது அழகிய உருவம். மங்கலை—உமாதேவி. புன்னுகன்—புன்னுக விருக்ஷத்தடியில் எழுந்தருளியுள்ளவன். எயில்—மதில். உருத்தான் — கோபித்தவன். மங்கலை புல்நாகன் எனக்கொண்டு உமாதேவி தழுவிய சிவபெருமான் என்றலுமாம்,

(5) கூந்தலுக்கும் — முரசுக்கும்

கொஞ்சுகிளித் தேன்மொழியார் கூந்தலுங்கோத் தூரியமும்
மஞ்சுமே லூரு மயிலையே—பஞ்சுறுதாட்
கற்பகவல் லிக்குழையார் மேனியிடை காக்குமனைக்
கற்பகவல் லிக்குழையார் காப்பு.

கோதூரியம் — அரசமுரசு அல்லது விழா முரசு. (1) மஞ்சுமேல் ஊரும் — மேகத்தின் மேற்பட்டு அதனை வெல்லும். (2) மஞ்சு மேல் ஊரும்—யானை முதுகின்மேல் ஏறியிருக்கும். பஞ்சு—செம்பஞ்சுக் குழம்பு. கற்பகவல்லி ஆர் இடை—கற்பக மரத்தைத் தழுவியுள்ள காயவல்லி என்னும் கொடி போன்ற இடை என்னும் உடலுறுப்பு. குழை ஆர் மேனி — தளிர்போன்ற திருமேனி. காக்கும் அ(ன்)னை — உயிர்களைக் கருணையால் காக்கின்ற தாய். கற்பகவல்லிக்கு உழையார்—கற்பகவல்லி என்னும் திருநாமமுள்ள உமாதேவிக்குப் பக்கத்தில் உள்ளவர். (கற்பகவல்லி—திருமயிலைத் தலத்துத் தேவி பெயர்)

(6) கள் இறக்குவோர்க்கும் — சான்றோர்க்கும்

ஈக்களுறக் கும்பமதி லீடேறச் சான்றுரரான்
மாக்களையுஞ் சேர்க்கு மயிலையே—மோக்கஞ்சேர்
கங்கைகொண் டான்றலைமேற் கற்பகமென் னிற்பிணைவா
மங்கைகொண் டான்றன் மனை.

கும்பம்—(கட்)குடம். ஈடேற — பிறவிச் சாகரத்தைத்தாண்ட. சரன்றோர் — (1) கள் இறக்குவோர். (2) சான்றோர். ஆன்மாக்கள் — (அறிஞர்க்கு) மிகுந்த வெறுப்பினை நல்கும் கள். (2) ஆன்மாக்கள் — உயிர்கள். மோக்கம்—மோக்ஷம். கற்பகம் என் இல் — கற்பகாம்பிகை என்னும் பெயரினையுடைய மணிவியை. பிணை—மான். வாமம்—இடப்பாகம். வாமங்கை — இடக்கரம். கொண்டான்—கொண்ட சிவபெருமான்.

(7) தட்டாருக்கும் — கடலுக்கும்

அங்காடித் தட்டாரும் ஆழ்கடன்மா வாசியிலும்
வங்காரந் தூக்கு மயிலையே—சிங்கார
வேலரருட் கூத்தாடு வேழமுக னீன்றுளோர்
பாலரருண் மேனியார் பற்று.

அங்காடி—கடைவீதி. மாவாசி—அமாவாசி. வங்காரம்—(1) ஒரு வகை உலோகம். (2) கப்பலும் பூமாலையும். தூக்கும்—(1) நிறுக்கும். (2) ஏந்தும். சிங்காரவேலர்—தலத்துக் குமாரக்கடவுள். ஓர் பாலர் — ஒரு பாகத்தில் உடையவர் அல்லது, கருதுகின்ற தன்மை உடையவர். அருள்மேனி—கருணை வடிவு.

(8) வானவர்க்கும் — கற்றவர்க்கும்

வட்டித் துழைமுதல வானவருங் கற்றவரும்
மட்டிட் டிசைக்கு மயிலையே—சிட்டர்வாழ்
நான்மாடக் கூடலினன் ஞரைக்கு முத்தியருள்
வான்மாடக் கூடலினன் வாழ்வு.

வட்டித்து — ஒற்றறுத்து, உழைமுதல — உழைமுதலிய இராகங்களில். 'மட்டிட்ட' இசைக்கும்—'மட்டிட்ட' என்று தொடங்கும் இத்தலத்துச் சம்பந்தர் தேவாரத்தைப் பாடும், (2) மட்டு இட்டு இசைக்கும்—தேன்கலந்தாற்போன்று அல்லது குறிப்பறிந்து அல்லது அளவறிந்து பேசும். சிட்டர்—திருத்தொண்டர். நான்மாடக் கூடல்—திருவாலவாய்த்தலம், (திருவிளையாடல்—கூடற்காண்டம்–நான்மாடக் கூடலான படலம் (19-வது)

பார்க்க. வான்மாடு—இருவினையொப்பும் மலபரிபாகமும் அடைந்த அளவில் திருவருட்டுணைவலியால் பாசம் நீங்கப் பதியாகும் சிறப்பினையுடைய ஜீவன். "சித்தமலமறுத்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்." என்னும் திருவாசக அடிகள் ஈண்டு ஒப்புநோக்கத் தகுந்தன. (2) கூடு அல் இனன்—சரீரத்தை யான் என்று கருதும் அஞ்ஞான மாகிய இருளைப்போக்கும் சூரியன். நாரைக்கு முத்தி யளித்த திருவிளையாட்டைத் திருவிளையாடற் புராணம் 48-வது படலத்திற் காண்க.

"என்றுமித்தடமீனிலவாகநீ
நன்றுசால்வரநல்கெனவெள்ளிமா
மன்றுளானும் வரந்தந்து போயினன்
சென்றுநாரை சிவலோகஞ் சேர்ந்ததால்" 21

(9) நெய்தல் நிலச்சிறுமிகட்கும்—மன்மதனுக்கும்

விஞ்சுலையில் வண்டனுளை வேல்விழியா ரும்வேளும்
மஞ்சரம் பெய்யு மயிலையே—அஞ்சமுறை
தெய்வீ கபாலியார் செந்தலத்தார் மெய்யுணர்ந்தார்க்
குய்வீ கபாலியார் ஊர்.

உலை — உலைநீர். வண்டல் — மகளிர் விளையாட்டு. நுளைவேல்—விழியார்—வேலொத்த விழியுற்ற நெய்தனிலச்சிறுமியர். வேள்—மன்மதன். மஞ்சரம் பெய்யும் — (உலையில்) முத்துக்களை இடும். மஞ்சர் அம்பு எய்யும் — குமார பருவத்தினர் மேல் பஞ்சபாணங்களை எய்கின்ற. அஞ்சம் உறை—அன்னம் தங்குகின்ற. தெய்விகபாலி—

தெய்வத்தன்மையுடைய பாலிநதி. ஆர்—பொருந்தியுள்ள. செந்தலம் = செம்மை வாய்ந்த தலம். உய்வு ஈ கபாலியார்—ஸகல கேவலங்களினின்றும் தப்பிப் பிழைத்தலைத் தந்தருளும் கபாலி என்னும் திருநாமத்தையுடைய சிவபெருமான். திருமயிலைத் தலத்துச் சுவாமி பெயர் கபாலீச்சுரர் என்பது.

(10) மங்கையர்க்கும் — யோகியர்க்கும்

பூமகள்போல் வார்நடையும் பூரகந்தேர் யோகியரும்
வாமனத்தை யீர்க்கு மயிலையே—நாமன்னர்
தாண்டகத்தா ரென்பவரவர் சாற்றுபதி கங்கொளவே
வேண்டகத்தா ரென்பரவர் வீடு.

பூமகள் — இலக்குமி. பூரகம் — அட்டாங்கயோக உறுப்பினுள் ஒன்ருகிய பிராணுயாமத்துள் சுவாசம் அல்லது வாசி மேல் ஏறுதல். "ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்" என்பது திருமந்திரம். பூரகத்தின் உண்மை இயல்பை சிவராஜயோகியினிடம்தான் அறிந்துகொள்ளக் கூடும். யோக நூலைப் படித்துவிட்டுப் பழகுதல் உசிதம் அன்று. (அ, வாம்—பெற விரும்புகின்ற முதற் குறைச் செய்யுள் விகாரம் பெற்றுவாம் என நின்றது. அன்னத்தை என்பது இடைக்குறைந்து அனத்தை என நின்றது. (2) வாம் மனத்தை — தாவிச்செல்லுகின்ற மனதை. நாமன்னர்—திருநாவுக்கரசர். (1) என்பர் அவர்—என்று விசேடித்துச் சொல்லப்படுகின்ற அவர். வேண்டு அகத்தார்—விரும்புகின்ற உள்ளத்தினையுடையவர். (2) என்பு அரவர் — எலும்பினையும் பாம்பினையும் ஆபரணமாகப் பூண்டுள்ளவர்.

(11) வானத்திற்கும் — திருவாசகம் ஓதுவார்க்கும்

கூறுவகை யாடுசிறுர் கொள்ளவின் பத்தோது
வாருருக் கங்கொண் மயிலேயே—பாருலகின்
மாணிக்க வாசகத்தான் வாடா தெனேயாண்ட
மாணிக்க வாசகத்தான் வாழ்வு.

உவகை — களி. ஆடுசிறுர் — விளேயாடும் பருவச் சிறுவர்கள். இன் பத்து — இனிய பதிகம் அல்லது இன் பத்துடன். கம் உருகொள் — மேகம் பல வண்ணங்களே அல்லது வடிவுகளேக் கொள்ளுகின்ற. உருக்கம் கொள் — மனம் நெக்குருகுதலேப் பெறுகின்ற. (1) மாண் இக்க ஆசு அகத்தான் — பெருமை வீழ்ந்த குற்றமாகிய அகங் காரத்தால் அல்லது மாண் இக்கு அவா சகத்தான்–பெரு மையை உடைய கரும்பினிடத்துக் கொள்ளுவதுபோன்ற ஆசையினே ஊட்டுகின்ற, பிரபஞ்சத்தால். (2) மாணிக்க வாசகத்தான்—திருவாதவூரரை 'மாணிக்கவாசக' என்று அழைத்தவன் அல்லது 'மாணிக்கம்' என்றும் 'மறை பயின்ற வாசகன்' என்றும் அழைக்கப்பெற்றவன்.

(12) செம்படவருக்கும் — புலவருக்கும்

துள்ளுசுருச் செம்படவர் சொற்புலவர் தூயதிரு
வள்ளுவ ராயு மயிலேயே—ஒள்ளிதழ்த்
தாமரை யேந்துகரர் சாத்துக ணேந்தடியார்
தாமரை யேந்துகரர்ச் சார்பு.

சுரு—ஒருவகை மீன். தூயதிரு வள் உவர் ஆயும்— உலகத்திற்கோர் வலிய பற்றுக்கோடாக உள்ள செல்வ

வளம் பொருந்திய கடலில் தேடும். தூய திருவள்ளுவர் ஆயும் — குற்றமற்ற திருக்குறளை ஆராயும். தாமரை ஏந்து கரர் சாத்து கண் ஏந்து அடியார்—தாமரை மலரை ஏந்திய கைகளால் தனது கண் மலரை மகாவிஷ்ணுவான வர் சாத்த அதனை ஏற்ற திருப்பாதங்களை உடையவர். தாமரை ஏந்து கரர்—தாவுகின்ற மானை ஏந்திய கையை உடையவர்.

(13) கம்மாளர்க்கும் — பசு, எருமைகட்கும்

கைக்கம் மியருங் கவரியோ டானினமும்
வைக்கோ லயில்செய் மயிலையே—மைக்கோல
மானுகத் தான்மருகன் வாலிமறை போற்றுபனி
மானுகத் தான்மருகன் வாழ்வு.

கை கம்மியர் கைத்தொழில் வல்ல கம்மாளர். கவரி—எருமை. ஆனினம்—பசுக்கூட்டம். வைகோல் அயில்—கூரிய அம்பும் வேலும். வைக்கோல் — நெற்பயிரின் காய்ந்ததாள். அயில்செய் — உண்ணுகின்ற. மை கோல மான் ஆகத்தான் அல்லது நாகத்தான்—கரிய நிறத்தை யுடைய வராகம் என்னும் விலங்கின் உடல் கொண்டவ தரித்தவன். நாகத்தான் — காளிங்கன் மீது நர்த்தனஞ் செய்தவன். (1) மருகன்—மருமகனுகிய குமாரக் கடவுள். பனிமால் நாகத்தான் மருகன்—இமம் பொருந்திய பெரிய இமயமென்னும் மலையரசனது மருமகனுகிய சிவபெருமான்.

(14) தேவலோகத்திற்கும் — விரதியர்க்கும்

விண்டலமுஞ் சீரால் விரதியரு நோன்பினுன்
மண்டலம் போற்று மயிலையே—புண்டரிகத்
தண்டரங்க மாடினுன் சத்திகவி வந்தனையான்
பண்டரங்க மாடினுன் பற்று.

விண்தலம் — தேவருலகம். இடவாகுபெயராய்த் தேவர்களை உணர்த்திற்று. சீரால் — (திருமயிலையின்) தெய்வீகச் சிறப்பால். மண்தலம்—பூலோகம். (2) மண்டலம்—நாற்பத்தெட்டுநாள். போற்றும்—(1) துதிக்கும் (2) காக்கும். புண்டரிகதண்தரங்கம் ஆடினுன் — தாமரை வளர்ந்துள்ள குளிர்ச்சி பொருந்திய நீரில் ஸ்நாநம் செய்தவன். சத்தி—உமாதேவியார். கவி—சுக்கிரன். பண்டரங்கம் ஆடினுன் — பாண்டரங்கம் என்னும் கூத்தினை ஆடிய சிவபெருமான். வந்தனையான் — வழிபாட்டினையுடையவன்.

(15) முனிவர்கட்கும் — தட்டார்க்கும்

ஆசைநீக் கந்தணரு மாவலுடன் றட்டாரும்
மாசை யுருக்கு மயிலையே—காசைசேர்
பொய்கை விளையாட்டார் பொன்மொழிவேட்டேடெதிர
வைகை விளையாட்டார் வாழ்வு.

அந்தணர்—முனிவர். மாசு ஐ—மும்மலக்குற்றங்களை உருக்கும் — கோபிக்கும். (2) மாசை — தங்கம். உருக்கும்-நெருப்பிடைக் காய்ச்சும். காசை—நாணல். காசை சேர் பொய்கை விளையாட்டார்— சரவணப் பொய்கையில்

விளையாடியருளிய ஆறுமுகப்பெருமான். ஈண்டு அவர் அம்சமாகிய ஆளுடைய பிள்ளையார். பொன்மொழி— அழகிய மொழியாகிய திருக்கடைக் காப்பு. வேட்டு — விரும்பி. ஏடு எதிர — வைகையாற்றிற் சம்பந்தரிட்ட தேவாரப்பதிக ஏடு நீரோட்டத்தை எதிர்த்துச்செல்ல. வைகை — பாண்டியநாட்டு நதி. விளையாட்டார் — திருவிளையாடலைப் புரிந்தவர். வைகையாற்றில் ஏடெதிரச் சென்ற வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணத்தில் 796–852 செய்யுள்களில் காண்க. "திருவுடைப்பிள்ளையார் தந் திருக்கையாலிட்டவேடு—மருவிய பிறவியாற்றின் மாதவர் மனஞ்சென்றுற்போற் — பொருபுனல் வைகை யாற்றிலெதிர்த்துநீர் கிழித்துப்போகு — மிருநிலத் தோர்கட்கெல்லா மிதுபொரு ளென்றுகாட்டி" (846.) "எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென்றெழுதுமேட்டிற்—றம்பிரானருளால் வேந்தன் றன்னை முன்னேங்கப்பாட — வம்புய மலராள் மார்பனநபாயனென்னுஞ் சீர்த்திச் செம்பியன் செங்கோலென்னத் தென்னன்கூ னிமிர்ந்ததன்றே." என்ற பாடல்களைக் கவனிக்க.

(16) பக்தருக்கும் — கீழ்த்திசைக்கும்

பாசமறு நேசரையும் பானுவரு கீட்டிசையும்
வாசவனங் காக்கு மயிலையே—மாசகற்றும்
எட்டிரண் டன்ன ரிலிங்கவுரு வானர்நெய்
எட்டிரண் டன்ன ரிடம்.

பாசம்—வினைக்கட்டு, புவனபோகங்கள். பாநு-சூரியன். கீட்டிசை = கீழ் + திசை = கிழக்கு. வாசவன்—

இந்திரன். அங்கு ஆக்கும் — அவ்விடத்திற் செய்யும். (2) வாசவனம் காக்கும்—நீர்வாழ்வனவற்றிற்கு இடமாகிய நீராகிய கடல் காவலைச் செய்யும். மாசு—மும்மலம். எட்டு இரண்டு அன்னூர் — அகார உகார வடிவினராகிய அச் சிவபிரான் அதாவது அருவுருவாகியவர். இலிங்க உரு — இலிங்க உருவங்கொண்டவர். ஆனூர் — இடப வாகனர். நெய் எள்திரண்டு அன்னூர்—நெய் எள்ளினுள் எங்கும் நிறைந்திருத்தலை ஒத்து சருவவியாபியாய் உள்ளவர்.

(17) சிற்பியருக்கும்—புலவரது மிக்க புகழுக்கும்

ஆதிகலைச் சிற்பியரும் ஆய்புலவர் சீர்த்தியதும்
மாதிரந் தீட்டு மயிலையே—பாதியுருப்
பெண்ணுனுன் முப்பகை பாற்றினர்பாற் பேரொளியார்
கண்ணுனன் கண்ணுதலான் காப்பு.

சீர்த்தி—மிகுபுகழ். மா திரம் தீட்டும் — நெடுநாள் இருக்கும் வண்ணம் வரையும். மாதிரம் தீட்டும்—வானளாவும் அல்லது திசைகளை எட்டும். தீண்டும் என்பது வலித்தல் விகாரம் பெற்றுத் தீட்டும் எனவாயிற்று. பாற்றினர்—கெடுத்தவர். பால்— ஏழன் உருபு. கண்ணுனன்—ஞானக்கண்ணுகியவன். கண்ணுதலான்—(நெருப்பாகிய) கண்ணைக்கொண்ட நெற்றியையுடையவன்.

(18) கூந்தலுக்கும் — கழகத்திற்கும்

அல்லிகலார் கூந்தலிலும் ஆடுகழ கத்திடமும்
மல்லிகை நாறு மயிலையே—சொல்லிடில்
அன்புருவாந் தொண்டர்பா லானந்த மெய்ப்போதன்
என்புருவாப் பூண்டா னிடம்.

அல்—இருள். இகல்—பகை. கழகம் — ஆயுதம் பயிலிடம். மல்லிகை—ஒருவகை மலர். மல் இகை — மற்போர் தருதல். நாறும்—(1) மணம் வீசும். (2) தோன்றும். ஆனந்தமெய்ப்போதன்—சச்சிதானந்தன். என்பு—எலும்பு. உரு — அழகு.

(19) ஞானிகளுக்கும் — மங்கையர் கண்களுக்கும்

மெய்யுணர்ந் தோரும் விரைக்குழலார் நேத்திரமும்
வையம்பே யென்னு மயிலையே—சையமிசை
வாழ்வார் தமருகத்தார் மன்றினட மாடிவரும்
வாழ்வார் தமருகத்தார் வாழ்வு.

விரைக்குழல்—இயற்கை மணம் பொருந்திய கூந்தல். வையம்—பூமி (பூவுலகம்). பேய்—பேய்த்தன்மையுடையது. (2) வை அம்பே—கூர்மையான அம்பே. சையம்—மலை. தம்—மனைவி. அருகு—அருகிற்கொண்ட. அத்தார் — செம்மேனியார். மாடு இவரும் — இடபத்தை ஊரும். தமருகம் — சிவபெருமான் கையில் உள்ளதும் சிருட்டிக்குக் காரணமானதும் ஆகிய துடியென்னும் ஒருவகை ஒலிக்கருவி.

(20) ஆடவர்க்கும் — பெண்டிர்க்கும்

சார்மணத்தி னுடவர்கள் சாயல்கூர் நீடோகை
மார்பலங்கா ரஞ்சேர் மயிலையே—கார்வணத்த
அஞ்சக் கரத்த னயன்காணுத் தாடலையான்
அஞ்சக் கரத்தா னகம்.

சார் மணம்—பொருந்திய விவாகம். சாயல் கூர்—மென்மை அதிகரிக்கின்ற. நீள் தோகைமார் — நீண்ட கூந்தலை உடைய மகளிர். (1) மார்பு அலங்கு ஆரம் (அல்லது) அலங்காரம் சேர்—மார்பானது அசைகின்ற மாலைகள் அல்லது கலவை முதலிய வாசனைத் திரவிங்களால் அலங்காரம் சேர்ந்துள்ள. (2) மார் பல் அங்கு ஆரம்சேர்—மார்பு பதக்கம் அணியப்பெற்றதாயும், பற்கள் முத்துக்கள்போல் வரிசையாக அமைந்துள்ளதாகவும் உள்ள. கார் வ(ண்)ணத்த அம் சக்கரத்தான்—மேகத்தினது நிறம் பொருந்திய அழகிய சக்கராயுதத்தையுடைய திருமால். அயன்—பிரமன். தாள்தலையான்—அடிமுடி உடையவன், அஞ்சு அக்கரத்தான் — திரு ஐந்தெழுத்தின் பொருளாக உள்ளவன். (தாள் + தலை = தாடலை)

(21) காதலர்க்கும் — வண்டிற்கும்

வேலையிற் காதலரும் வேண்டிமட் டார்பதமும்
மாலையிற் கூடு மயிலையே—சேலையிற்
கண்ணுடையா ளாறுதலங் கண்டறிந்தார்போற்றுமொழிப்
பண்ணுடையாள் பாகன்றன் பற்று.

வேலை—கடற்கரை. மட்டு வேண்டி—தேனை விரும்பி. ஆர் பதம்—வண்டு. மாலை-(1) மாலைக்காலம். (2) பூமாலை. சேல் அயில்கண்—சேல் மீனைப்போன்றும் வேலைப்போன்றும் உள்ள கண்கள். சேலையில் என்பதில் அகரத்திற்கு ஐகாரம் போலியாய் வந்தது. ஆறு தலம்—ஆறு ஆதாரங்கள். மொழிப்பண்—உருவகம். பாகன்—சிவபெருமான்.

(22) மங்கையர் கரத்துக்கும் — கூந்தலுக்கும்

கண்டுமொழி நல்லார் கரத்துமவர் கூந்தலிலும்
வண்டின மார்க்கும் மயிலையே—பண்டொருநாள்
தண்டுறை யங்கத்தார் தாங்கல் வலைவீசும்
விண்டுறை யங்கத்தார் வீடு.

கண்டு—கற்கண்டு. நல்லார்—மெல்லியலார். கரம்—கை. வண்டினம்—வளையல்கள் (2) வண்டு இன் அம்—சுரும்பு இனிய தேனாகிய நீரினிடம். (1) ஆர்க்கும் — ஒலிக்கும். (2) இரைக்கும். பண்டு—முன்பு. தண் துறை அம் கத்து ஆர் தாங்கல்—குளிர்ந்த துறையினையும் அழகிய ஓசையினையும் பொருந்திய நீர் நிலை. வலை வீசும்—(வலைஞர் மாதாக அவதரித்த உமாதேவியை மணப்பதற்காகக் கூடலில்) வலைவீசிய சோமசுந்தரக்கடவுள் (சிவபெருமான்). திருவிளையாடற் புராணத்தில் வலைவீசிய திருவிளையாடலைப் பார்க்கவும். விண்டு உறை அங்கம்—விஷ்ணு தங்குகின்ற உடல்.

(23) கொங்கைக்கும் — கடலோரத்திற்கும்

காரோதி யார்தனமுங் கானல்சேர் நீரருகும்
வாரோடங் கூடு மயிலையே—நாரோ
டரும்பிட்டு வந்தார்க் கருள்தருவார் வந்தி
தரும்பிட்டு வந்தார் தலம்.

கார் ஓதி—கரிய கூந்தல். தனம்—கொங்கை. கானல்—கழி. (1) வார் ஓடு அங்கு ஊடும்—கச்சுடன் அவ்விடத்துப் பிணங்கும். (2) வார் ஓடம் கூடும்—நெடிய ஓடங்கள்

சேரும். நார்—அன்பு. அரும்பு இட்டு வந்தார்—அரும்பே னும் இட்டுப் பூசித்து வந்தவர்கள். வந்தி — செம்மனச் செல்வியார். பிட்டு உவந்தார்—பிட்டினை உண்டு மகிழ்ந் தவர். இச்செய்யுளில் இறைவன் மதுரையிற் பிட்டுக்கு மண்சுமந்த வரலாறு வந்துள்ளது. திருவிளையாடற் புராணம் 61-வது மண்சுமந்த படலம் 21, 22-வது பாடல் கள் பின்வருவன:—

பிட்டிடுவே னுனக்கென்று ளதற்கிசைந்து பெரும்பசியாற்
சுட்டிடநான் மிகமெலிந்தேன் சுவைப்பிட்டி லுதிர்ந்தவெலா
மிட்டிடுவா யதுமுந்தத் தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவே னின்னுடைய கரையென்றான் கரையில்லான் (21)

தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதிநீக்கி
யள்ளியெடுத் தருந்தப்பா வென்றிட்டா ளரைக்கசைத்த
புள்ளியுடைத் துகினீத்தான் புறத்தானை விரித்தேந்தி
யொள்ளியதென் றவளன்பு முடன்கூட்டி யமுதுசெய்தான் (22)

24, தலைவிக்கும் — சோலைக்கும்

தென்றலுறும் போதுள்ளந் தேவியரும் பூம்பொழிலும்
மன்றலைச் செய்யு மயிலையே—வன்றலையோ
ரைந்திணை யன்பி னரக்கனுக் காயுடந்த
"ஐந்திணை யன்பி" னகம்.

தென்றல் — தெற்கிலிருந்து வீசும் இளங்காற்று. பொழில் — சோலை. 1. மன்தலை — கணவனிடமாக 2. மன்றல் ஐ — வாசனையை. வன்தலை—வலியதலை. ஓர்

ஐந்து இணை — பத்து. அன்பின் அரக்கன் — அன்பினை யுடைய அரக்கனுகிய இராவணன். ஆயுள் — வயது. "ஐந்திணை அன்பின்" — 'அன்பின் ஐந்திணை' — என்று தொடங்கும் அகப்பொருள் நூலைப்பாடிய இறையனு ராகிய சிவபெருமானது.

25. இரசவாதிகட்கும் — மாடவீதிக்கும்

வாதஞ்செய் வோரிடமும் வான்மாட வீதியிலும்
மாதங்கஞ் சேரு மயிலையே — போதஞ்சேர்
பாலுண்டார் கோளரியார் பாடுமறைத் தோடுடையார்
மாலுண்டார் கோளரியார் வாழ்வு.

(1) மாதங்கம்-மிக்க பொன். (2) மாதங்கம்-யானை. போதம்—சிவஞானம். கோளரியார் — பரசமயகோளரி யார் ஆகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். மறைத் தோடு உடையார்-வேதப்பொருளும் குருவருளும் ஆகிய "தோடுடைய செவியன்" என்ற திருக்கடைக் காப்பினை உடையவர். மால் உண்டார் கோள் அரியார் — அஞ்ஞா னத்தால் விழுங்கப்பட்டவர்களால் பெறுதற்கு அரியவர்.

26. சோலைக்கும் — கன்னியர்க்கும்

கொண்டலமர் சோலையிலுங் கூடியிளங் கன்னியரும்
வண்டலரங் காடு மயிலையே—யெண்டிசைகால்
சுத்தமணி வானவன் சூடவிழை தக்கவிற்றுன்
மத்தமணி வானவன் வாழ்வு.

கொண்டல்-மேகம். அமர்-தங்கும். (1) வண்டு அலர் அங்கு ஆடும்—வண்டு ஊதுவதால் மலரும் புஷ்பங்கள்

அங்கு அசையும். (2) வண்டல் அரங்கு ஆடும் — அரங்கின் இடமாக விளையாட்டினைப் புரியும். எண்டிசை — எட்டுத்திக்குகள். கால் — (பிரகாசத்தை) உமிழ்கின்ற. வானவன் — இந்திரன். விழைதக்க — விரும்பத்தகுந்த. மத்தம் — ஊமத்தம்பூ. அணி + வால் + நவன் = அணிந்துள்ள தூய நவந்தரு பேதங்களை உடையவன். நவந்தரு பேதங்களாவன — உருவம் நான்கு, அருவம் நான்கு, அருவுருவம் ஒன்று என்பன. நவன் என்பதற்குப் "பின்னைப் புதுமைக்கும் பேர்த்து மப் பெற்றியனே" என்ற திருவெம்பாவை மறைமணி வாசகத்தின்படி புதியவனே என்று பொருள் கொள்ளலுமாம். அணிவான் அவன் எனக்கொண்டு உரைப்பினும் பொருந்துமேனும் பொருட் சிறப்பின்றாகும்.

27. வண்டிற்கும் — விரகத்தார்க்கும்

செந்தா மரைவண்டும் சேர்விரகத் தாரிடமும்
மந்தாரம் பாடு மயிலையே — இந்தார்
புனனிறைகோ டீரத்தர் புண்ணியாவென் பார்தம்
மனனிறைகோ டீரத்தர் வாழ்வு.

(1) மந்தாரம் பாடும் — ஒருவகை இசையினைப் பாடும் (2) மந்து ஆர் அம்பு ஆடும் — மன்மதனது குற்றம் பொருந்திய அம்பு வெற்றி கொள்ளும். இந்து ஆர் புனல் நிறை கோடீரத்தர் — சந்திரனும் ஆத்திமலரும் நீர் நிறைந்த கங்கையும் பொருந்திய சடையினை உடையவர். மனன் நிறை (அல்லது இறை) கோள் தீர் அத்தர் — மனத்தின்கண் நிறைந்துள்ள அல்லது தங்குதலைக்கொண்ட குற்றங்களைப் போக்குகின்ற தலைவர்.

28. பறவைக்கும் — வேள்விப்பலிக்கும்

தேனெதிரப் பாடுபுள்ளுந் தீதருவேள் விப்பலியும்
வானெதிரச் செல்லு மயிலேயே—தானெதற்குங்
காரணத்தா னேக்காவான் கன்னலருத் துஞ்சித்தன்
வாரணத்தா னேக்காவான் வாழ்வு.

எதிர—ஒப்ப. புள்—பறவை. தீ தரு—ஹோமாக் கினியிற் பெய்கின்ற. வேள்விப் பலி—யாகத்தில் தேவர் களுக்கு அளிக்கப்படும் அவிர்ப்பாகம். வான் எதிர – ஆகா யத்தை அளாவ. (2) தேவர்கள் அவிப்பலியைப் பெறும் பொருட்டு எதிர்நோக்கி வர. காரணத்து ஆனைக்கு ஆ(க)—காரணத்தால் கல்லானை தின்பதற்காக. கன்னல்— கரும்பு. அருத்தும்—தின்னக்கொடுக்கும். சித்தன் — எல்லாம் வல்ல சித்தர். வாரணத்தான் ஐ — திருமாலுக் குத் தலைவன். கா ஆன் — திருவானைக்காவில் எழுந் தருளியுள்ளவன்.

29. செவ்வரிக்கும் — மாதவருக்கும்

வைக்கூரும் வேல்விழியிற் செவ்வரியு மாதவரும்
மைக்கூடு வீசு மயிலேயே—கைக்கூடும்
மான்மறியார் கைத்தீயார் மாட்டொளிப்பார் வீடிவரத்
தான்மறியார் கைத்தீயார் சார்பு.

வைகூரும் — கூர்மை மிகும். வைக்கு ஊரும் — கூர்மையால் செலுத்துகின்ற (உருபு மயக்கம்) செவ்வரி— சிவந்த ரேகை. மைக்கு ஊடு வீசும் — தீட்டப்பட்ட அஞ்சனத்தின் ஊடே ஓடும். (2) மை கூடு வீசும் —

குற்றக்கொள்கலமாகிய யாக்கையினது நிலையாமையினை அறிந்து அதன்கண் பற்றினை நீக்கும். மான்மறி — மான் கன்று. கைத்து ஈயார்—பொருளினைப் பிறர்க்கு உதவாதவர்கள். வீடு இவர—மோக்ஷத்தை விரும்ப. வீடிவர — வீட்டி என்பது கடைக்குறையாக வந்தது என்றேனும் அல்லது வீடி என்னுந்தன்வினை பிறவினைப் பொருளில் வந்ததென்றேனுங் கொண்டு பாசங்களை அழித்துவர என்றும் பொருள் கொள்ளலாம். மறியார்—மறுக்கமாட்டார். கை தீயார்—கையில் அக்கினியைத் தரித்திருப்பவர்.

30. தாமரைக் குளத்திற்கும்—கவிஞர் மதிக்கும்

தண்டா மரைத்தடமுஞ் சார்கவிஞர் நுண்மதியும்
மண்டுக மூறு மயிலையே—விண்டூரும்
கந்தர வண்ணன் கழல்போற்ற வாழியருள்
அந்தர வண்ண னகம்.

(1) மண்டூகம் ஊறும் — தவளைகள் தோன்றும். (2) மண்டு ஊகம் ஊறும்—மிகுந்த யூகம் மேன்மேலும் சுரக்கும். விண்டு ஊரும் கந்தர வண்ணன் — மலைமேல் ஊர்ந்து செல்லும் மேகத்திற்கொப்பான நிறத்தையுடைய திருமால். ஆழி—ஜலந்தராசுரனைக்கொன்ற சக்கராயுதம். அந்தரவண்ணன்—ஆகாயத்தின் குணத்தை உடையவன். திருமாலுக்குச் சக்கரம் அருளியதைப் பின்வரும் திருவிளையாடற் செய்யுளடிகளால் அறிக:—

"சலந்தரனுடலங்கீண்ட சக்கரப்படையாய் போற்றி
வலந்தரு மதனைமாயோன் வழிபடக்கொடுத்தாய் போற்றி"
(சேனைக் கரையேற்றிய படலம்—17)

31. சுட்டியென்னும் ஆபரணத்திற்கும் — புதுமணம் புரிந்தோர்க்கும்

மிக்கமணிச் சுட்டியுஞ்சீர் மேவுமணத் தாருறவும்
மக்கடலைத் தோன்று மயிலையே—சக்கரஞ்சேர்
முத்தலை நீக்குவான் மூடுசோலை வாழ்முனிவர்
தத்தலை நீக்குவான் சார்பு.

மணிச்சுட்டி—இரத்தினங்கள் பதித்த ஓர் ஆபரணம். மணத்தார் உறவும் — புதுமணம் செய்துகொண்டோர் தன்பால் அணையுமாறு. (1) மக்கள் தலை தோன்றும் — குழந்தைகளின் சிரசில் காணப்படும். (2) ம கடல் ஐ தோன்றும் — பூர்ண சந்திரன் கடலிலிருந்து அழகாய் உதிக்கும். சக்கரம்—கடல். அல் ஐ நீக்கு — இருட்டைப் போக்குகின்ற. வான்மூடு சோலை — ஆகாயத்தை மறைக்கும்படி வளர்ந்துள்ள சோலையில். தத்தல்—தவறுதல். நீக்குவான் —இல்லாமற் செய்கின்றவன்.

32. பெற்றோருக்கும் — முனிவர்கட்கும்

பேணிப்பெற் றோருந்தம் பெண்மணிகட் கந்தணரும்
மாணிக்கங் காயு மயிலையே—வாணிக்கு
நாயகன் றந்தை நளினத்தா ளாகனைவி
நாயகன் றந்தை நகர்.

மாணிக்கு அங்கு ஆயும் — நல்லவரன் கிடைப்பதற்காக அவ்விடத்தில் ஆராய்கின்ற. (2) மாணிக்கம் காயும்— விலைமதித்தற்கரிய இரத்தினங்களையும் வெறுக்கின்ற.

வாணிக்கு நாயகன் தந்தை—சரசுவதியின் கணவனாகிய பிரம்மாவின் தந்தையாகிய திருமால். நளினத்தாள் ஆகன் — ஐ — இலக்குமியை மார்பில் உடையவனுக்குத் தலைவன். விநாயகன் தந்தை—பிள்ளையாருக்குத் தகப்பன்.

33. பரதேசிகட்கும் — தொன்மையுடையோர்கட்கும்

சுற்றுபர தேசிகளுந் தொன்மரபி னேரகத்தும்
வற்றலோ டுண்ணு மயிலையே—ஒற்றியூர்
வந்தார் மகிழடியார் வட்டித்தார் ஏசறவு
வந்தார் மகிழடியார் வாழ்வு.

அகத்து—வீட்டில். (1) வற்று அல் ஓடு உண்ணும்—என்றும் வற்றுதலை அறியாத ஓட்டிலிருந்து உண்ணுகின்ற (2) வற்றல் ஓடு உண்ணும் — பலவகை மரக்கறி வற்றல்களுடன் உணவருந்துகின்ற. ஒற்றியூர் வந்தார் மகிழ் அடி ஆர் வட்டித்தார் ஏசறவு உவந்தார் — திருவொற்றியூரின்கண் வந்து மகிழ மரத்தினடியில் தங்கிச் சபதம் செய்து கொடுத்த சுந்தரமூர்த்தி நாயனாருடைய ஏசறவிற்கு மகிழ்ந்த சிவபெருமான். மகிழ் அடியார்—(மெய்யுணர்ந்தார்க்கு என்றும் மாறிலா) மகிழ்ச்சியினை அளிக்கின்ற திருவடியினை உடையவர்.

34. தென்னைக்கும் — அரசருக்கும்

பாளைசேர் தெங்கம் பழமீதும் பார்த்திபரும்
வாளை யெறியு மயிலையே—வேளையார்
எற்கிழித் தந்தா ரிடையார் மணநேரப்
பொற்கிழித் தந்தார் புரம்.

தெங்கம் பழம்—முற்றிய தேங்காய் (அம்-சாரியை) பார்த்திபர் — அரசர். (1) வாளை எறியும்—வாளைமீன் மோதும், வாளயுதத்தை வீசும். வேள் ஐ ஆர்—மன்மத னுக்கொப்பான அழகினையுடைய அந்தணனுகிய தருமி. எல் கிழி தந்து ஆர் இடையார்- சூரியகிரணத்தைப் பகுந் தாற் போன்றதும் நூலிழைபோன்றதுமான இடையினை உடைய கன்னியர். மணம் நேர-திருமணம் கூட. பொன் கிழி—பொன்முடி. தருமிக்குப் பொற்கிழியளித்ததைப் பின்வருஞ் செய்யுள்களாலறிக:—

"தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லிநல்கினுர்
இன்ன நீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினுன்"

(தருமிக்குப் பொற்கிழியளித்த—88)

"கற்ற கீரனுங் கலைஞருங் கழகமண்டபத்தி
லுற்ற வாடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்
தற்ற நீங்கிய கல்வியின் செல்வரா யமர்ந்தார்"

(கீரனைக்கரையேற்றிய—26)

இறைவன் பாடித்தந்த பாடல் பின் வருமாறு:—

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"

35. ஞானிகட்கும் — இல்லறத்தார்க்கும்

பாசாந்த முற்றோர்தம் பாலுமறத் தோருவரும்
மாசாந்த மாடு மயிலையே — நேசாந்த
வஞ்சங்கண் டத்தார் மருங்குனசை வென்றவர்க்கா
நஞ்சங்கண் டத்தார் நகர்.

பாச + அந்தம் = பாசாந்தம் — பாசம் நீங்குதல். அறத்தோர்—இல்லறத்தார். உவர்—கடல். (1) மா சாந் தம் ஆடும்—மாட்சிமையுடைய சாந்தம் என்னும் சுத்த சத்துவகுணம் நர்த்தனம் செய்யும். (2) மாசாந்தம் ஆடும்—அமாவாசியில் முழுகும். நேசாந்த வஞ்சம் கண் தந்து ஆர் மருங்குல் நசை—நேசமற்ற வஞ்சம் பொருந்திய கண்ணினையும் நூலிழைபோன்ற இடையினையும் உடையார்பால் செல்லும் அவா. நஞ்சம் கண்டத்தார்—கழுத் தில் நஞ்சத்தினது கறையினை உடையவர்.

36. மங்கையர் விழிக்கும் — சாயலுக்கும்

குயிலை நேர்மொழியார் கூர்விழியோ சாயன்
மயிலையே மானு மயிலையே — கைலைசேர்
நீற்றொளி மேனியார் நின்மலா காவென்னார்
பாற்றொளி மேனியார் பற்று.

சாயல் — மென்மை, மேன்மை. விழியோ — விழி மட்டுமோ. மயிலை—மீன். ஏ—அம்பு. நீற்றொளி—திரு நீற்றினது ஒளி. கா என்னார்—காப்பாற்றுவாயாக என்று சொல்லாதவர்கள். பாற்று ஒளி மேனியார் — இடத்தில் ஒளித்துக்கொண்டுள்ள வடிவினையுடையார்.

37. கவிக்கும் — கடலுக்கும்

தெள்ளுதமிழ் நாவலர்தந் தீங்கவியு மார்கலியும்
வள்ளலையே மேவு மயிலையே—ஒள்ளிதழிப்
பொற்றா ருறவார் பொலிந்தெழிலார் வேணியரிங்
கற்றா ருறவா ரகம்.

தெள்ளு—தெளிந்த. தீம்—இனிப்பு. ஆர்கலி—கடல். (1) வள்ளல் ஐ—வரையாது கொடுப்பவர்களை. (2) வள் அலை — வலிமையுடைய அலைகள். மேவும் (1) சேரும் (2) பொருந்தும். ஒள் இதழி பொன் தார் உற — ஒள்ளிய அழகினை உடைய கொன்றை மாலை பொருந்த. ஆர் பொலிந்து — ஆத்திமலர் விளங்கி. எழில் ஆர்—அழகினை யுடையவர். 'ஆர்' என்பதனை வினைத்தொகையெனக் கொள்ளின் 'அழகு நிறைந்த' எனப்பொருள் படும். வேணி—சடை. இங்கு அற்றார்—இவ்வுலகத்தில் இறைவனை அன்றி வேறு பற்று அற்றவர்கள்.

38. ஞானிகட்கும் — கோபுரத்திற்கும்

நாகமெனச் சிறுபுலன் ஞானியருங் கோபுரமும்
மாகமடங் காக்கு மயிலையே—ஆகமஞ்சேர்
அஞ்சுமுகத் தாள்வா னருக்கனிந்தோன் கூற்றுவற்
கஞ்சுமுகத் தாள்வா னகம்.

நாகம்—பாம்பு. புலன்—ஐம்புலன்களை. (1) மா கமடம் காக்கும் — பெருமை பொருந்திய ஆமையைப்போல ஏக காலத்தில் அடக்கும். (2) மாகம் மடங்கு ஆக்கும்—ஆகாயத்தையளாவ உயரும் அல்லது ஒங்கும். ஆகமம் சேர்

அஞ்சு முக — இருபத்தெட்டாகமங்கள் தோன்றுதற்கு இடமான தத்புருஷம் முதலிய ஐந்து முகங்களோடு. தாள்வான் அருக்கன் இந்தோன் — தாள்களாக (பாதங்களாக) ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சூரியனையும் சந்திரனையும் உடையவன். (2) அஞ்சும் முகத்து—பயப்படும் இடத்து. கூற்றுவற்கு—இயமனுக்கு.

39. கற்பினுக்கும் — துறவிகட்கும்

நானவார் கூந்தலார் நன்முல்லை யாலறவோர்
வானம் பொழியு மயிலையே — கானவனய்
ஓர்விளை விற்றான் கொண்டா னேங்குயர் கூடலிற்றேன்
சேர்வளைவிற் றான்கொண்டான் சேர்வு.

நானம்—வாசனைத்திரவியம், வார்—நீண்ட. முல்லை கற்பு. முல்லையால் வானம் பொழியும்—கற்பால் மழை பெய்யும். அறவோர்—முனிவர். வான் அம்பு ஒழியும்—சிறந்த மன்மத பாணங்கள் நீங்கப்பெறும். கானவன் — வேடுவன். ஓர் வளைவில் தான் கொண்டான் — ஒப்பற்ற அல்லது ஒரு வளைந்த வில்லைத்தான் (கையிற்) கொண்டவன். கூடல்—மதுரை. தேன் சேர்வளை—தேன் நிறம் பொருந்திய வளையல். விற்றான்—விற்றவன். கொண்டான்—மடவார்களுடைய வளையல்களைக்கொண்டவன். "கிறிபேசி மடவார் பெய்வளைகள் கொள்ளும் காடவனை"—

—திருக்கஞ்சனூர்த் திருத்தாண்டகம்.

கானவனனைதைப் பின்வரும் பாரதச் செய்யுளாலுணர்க:—

"நனைமலர்சிதறித்தொழுது முன்னின்ற நந்திமேனயனம் வைத்தருளி
வினைபடுகேழல்வேட்டைடாமின்றேவேடராயாடுதல்வேண்டும்,

நினைவுறவெமதுகணத்தொடிக்கணத்தேரீயுமவ்வுருக்கொளு
கென்று
மனைவியுந்தானுங்கிராதர்தங்குலத்துமகிழ்நனும்வனிதையு
மானுர்''
(அருச்சுனன்றவநிலை—81)

இறைவன் வளையல்விற்றதனை 32-வது வளையல் விற்ற படலத்திற் காண்க:—

''பண்டுமுனிவர்பன்னியர்பாற்கவர்ந்தவளையேபட்டுவடங்
கொண்டுதொடுத்துமீண்டவர்க்கேயிடுவேமெனுமுட்கோளினர்
போற்
ருெண்டர்தொடுத்தவைவண்ணத்துணர்த்தார்போலத்தோள்
சுமந்து
மண்டுவளையைவிலைபகர்ந்துவணிகமறுகில்வருகின்ருர்''
(வளையல்விற்ற படலம்—20)

மதுரைக்கலம்பகத்தில் ''வலங்கொண்ட'' என்று தொடங்கும் 7-வது செய்யுளைப்பார்க்கவும்.

40. மன்மதனுக்கும்—நுண்ணறிவுடையோர்க்கும்

கோதகலு மைந்துமலர்க் கோலனங்க னும்புதரும்
வாதத்தே ருரு மயிலையே — ஓதக்கேள்
அக்க மணிந்தா னறுகுதும்பை சூடியன்பர்
பக்க மணிந்தான் பதி.

கோல்—அம்பு. அனங்கன்—மன்மதன். புதர்—நுண்ணறிவுடையார். வாததேர் ஊரும்—தென்றற் காற்ருகிய தேரினை ஊர்தியாக ஏறிச் செலுத்தும். (2) வாதத்து ஏர் ஊரும்—வழக்கெடுத்துரைக்கும் துறையில் அழகு மிகும். அக்கம்-உருத்திராக்கம். அணிந்தான்-அணுகியுள்ளவன்.

41. மங்கையர்க்கும் — தொண்டர்குழாத்திற்கும்

**காய்த்தெங்கு போற்குயத்தார் கண்ணுமெய்ச் சங்கமமும்
வாய்த்தொண்டை மேவு மயிலையே—சேய்த்தருவார்
மஞ்சுளத் தாரார் வளைத்தழும்பார் மெய்யுணரா
வஞ்சுளத் தாரார் மனை.**

கண்—ஏழன் உருபு சங்கமம் — சிவனடியார் கூட்டம். வாய் தொண்டை மேவும் — உதடுகள் கோவைக் கனிபோல் இருக்கும். (2) வாய் தொண்டு ஐ மேவும் — மெய்ம்மை சேர்ந்த திருத்தொண்டினைத் தலைமை பெற அல்லது அழகாகப் பொருந்தும்—சேய்தரு ஆர் — ஓங்கி வளர்ந்துள்ள மாமரத்தின் கீழ்ப்பொருந்தி உள்ளவர். மஞ்சுளம் தார் — மிருதுவான மாலை. வஞ்ச உளத்து ஆரார் — வஞ்சமுள்ள நெஞ்சத்தில் தங்காதவர். வஞ்சுளத்து என்பதில் அகரம் தொக்கி வந்தது.

42. மங்கையர் முகத்திற்கும் — கண்ணிற்கும்

**நாண்மலர்ச் செவ்வியால் நங்கையர் கட்கயலால்
வாண்முகத்தா ரென்னு மயிலையே — பூண்சிலம்பேங்
கன்ன விருப்பா ரயன்மாற் கரியார்பா
மன்ன விருப்பார் மனை.**

நங்கையர் நாண்மலர்ச் செவ்வியால் வாள்முகத்தார் என்னும்—உத்தம மாதர்கள் அன்றுமலர்ந்த தாமரைப் பூவைப்போன்ற அழகால் ஒளிபொருந்திய முகத்தை உடையவர்கள் என்று சொல்லப்படுகின்ற நங்கையர் கண் கயலால் வாள்முகத்தார் என்னும் — உத்தம மாதர்கள்

கண்ணுகிய கயல்மீனை உடைமையால் வாளை உடைய முகத்தார் என்று சொல்லப்படுகின்ற. பூண்சிலம்பு ஏங்கு அன்னம் இருப்பு ஆர் அயன்—ஆபரணமாகிய சிலம்பினது ஒலித்தல் போன்ற சத்தத்தைச் செய்யும் அன்னமாகிய வாகனத்தையுடையவராகிய பிரமன். மாற்கு — திருமாலுக்கு. பாமன்ன விருப்பார் — பாட்டில் மிகுதியும் விருப்பமுள்ளவர். சிவபெருமானுக்குப் பாட்டில் மிக்க விருப்பமுண்மையைப் பின்வரும் பெரிய புராணச் செய்யுளால் உணர்க:—

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகியசிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"
(தடுத்தாட்கொண்ட—70)

"பாட்டுக்குருகுஞ் தமிழ்ச் சொக்கநாதர்" (79) என்னும் மதுரைக் கலம்பகச் செய்யுளும் இதனை வலியுறுத்தும்.

43. விஷ்ணு பக்தர்களுக்கும்—சிவனடியார்கட்கும்

**நான்மூவர்ப் போற்றுநரும் நால்வர்சொற் றேறினரும்
மான்மேலார் தேவென் மயிலேயே—வான்மலைக்கோ
தண்டரையா ரானூர் தவஞ்செய் பனிவரைமா
தண்டரையா ராஞ ரகம்**

நான்மூவர்ப் போற்றுநர்—பன்னிரு ஆழ்வார்களையும் துதிக்கின்ற வைஷ்ணவ பாகவதர்கள். நால்வர் சொல் தேறினர் — சைவ சமயாசாரியர்கள் பாடியருளியுள்ள தேவார திருவாசகங்களின் உண்மைப் பொருளாகிய பதி,

பசு, பாசங்களின் இயல்களைத் தெளிந்தவர்கள். மால் மேல் ஆர் தேஎன் — திருமாலுக்கு மேலான தெய்வம் யார் என்று வினவும். (2) திருமாலை வாகனமாகக்கொண்டு அதன்மேல் ஊர்ந்து செல்லும் சிவபெருமானே பரம் பொருள் என்று விடைதரும். வான்—ஆகாயத்தையளாவிய அல்லது சிறந்த. மலைக்கோதண்டர் — மேருமலையினை வில்லாக உடையவர். ஐ ஆர் — இறைமைக்குணமுடையவர். ஆன் ஆர்—ஆன்மாவினிடம் ஒன்றாய் உடனாய் இருப்பவர். (ஆனார்—நீங்கார் அல்லது குறைவற்றவர் எனினுமாம்.) வரைமாது அண்டு அரையார் ஆனார்—பார்வதி நெருங்கியுள்ள அர்த்தநாரீசுவரர் ஆனவர். இச் செய்யுளில் தண்டரையாரது திருப்பணியாகிய வெள்ளி இடபத்தையுடையவர் என்பதும் காணக்கிடக்கின்றது. பன்னிரு ஆழ்வார்களாவார்:— (1) பொய்கையாழ்வார். (2) பேயாழ்வார். (3) பூதத்தாழ்வார். (4) நம்மாழ்வார். (5) மதுரகவியாழ்வார். (6) திருமழிசையாழ்வார். (7) குலசேகராழ்வார். (8) திருப்பாணாழ்வார். (9) தொண்டரடிப்பொடியாழ்வார். (10) பெரியாழ்வார். (11) ஸ்ரீ ஆண்டாள். (12) திருமங்கையாழ்வார் என்பவர்கள். நால்வர் ஆவார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்பவர்கள். திருக்கற்குடித் திருத்தாண்டகத்தில் சிவபெருமானை "ஐ"யானை" எனப் பாடியிருத்தல் காண்க.

"என்றவனிடுக்கண்டீர்ப்பானிகல்புரிபுலன்களைந்தும்— வென்றவனெடியோன்றன்னை விடையவன் வடிவமாக்கி — நின்றவனறிவானந்தமெய்மையாய் நிறைந்த வெள்ளி — மன்றவனூழிச் செந்தீவடிவினை மனத்துட்கொண்டான்" என்னும் திருவிளை

யாடல் (இந்திரன் பழிதீர்—52) செய்யுளில் திருமாலை விடையாகக் கொண்டமை காண்க.

44. மிக்க புகழ்க்கும் — கடற்கரைக்கும்

மோனத்தார் சீர்த்தியு முந்நீர்க் கரையிடத்தும்
வானத்தை யூரு மயிலையே—தேனொத்த
வானோர் முடிக்கணியார் வாய்மூரார் சாற்றெருக்குத்
தானோர் முடிக்கணியார் சார்பு.

சீர்த்தி—மிகு புகழ். மோனத்தார்—ஞானவரம்பை அடைந்தவர்கள். முந்நீர் — கடல். (1) வானத்தை ஊரும் — ஆகாயத்தை அளாவும். (2) வால் நத்தை ஊரும்—வெள்ளிய சங்குகள் ஊர்ந்து செல்லும். முடிக்கு அணியார் — சிரசுக்கு ஆபரணமாக விளங்குபவர். வாய்மூரார் — திருவாய்மூர் என்னும் தலத்தையுடையவர் (சோழநாட்டிலுள்ளது.) எருக்கு — எருக்கு மலர் மாலை. முடி கண்ணியார்—முடியில் கண்ணியாகச் சூடியுள்ளவர்.

45. கடற்கரையிலுலாவுவோர்க்கும் — மேன்மைக்குணம் வாய்ந்தவர்கட்கும்

சிந்தார் கரையருகிற் சென்றேரு மேலவரும்
வந்தாரை நாடு மயிலையே — இந்தூரும்
நீர்க்கங்கை யேற்று னினைந்துமல ரிட்டுக்காண்
பார்க்கங்கை யேற்றான் பதி.

சிந்து ஆர்—கடலைப்பொருந்திய. (1) வந்து ஆர் — காற்றாகிய கடவுளை. (2) வந்தார்—அதிதிகள். இந்து — சந்திரன். கங்கை ஏற்றான்—கங்காநதியைச் சடைமேல்

ஏற்றுக்கொண்டவன். அம்கை ஏற்ருன்—அழகிய கையில் பிக்ஷையைத் தாங்கினவன்.

46. மங்கையர் தோட்கும் — உலாவீதிக்கும்

அங்கனையார் தோண்மீது மாதியுலா வீதிதொறும்
வங்கியங் கூறு மயிலேயே—திங்களினன்
வட்டுரு வாஞர் வளிநீர் பசுநிலந்தீ
யெட்டுரு வாஞ ரிடம்.

(1) *வங்கி அங்கு ஊறும்—வங்கி என்னும் ஆபரணம் அவ்விடத்துத் தோன்றும்.* (2) *வங்கியம் கூறும்—இசைக் கருவி வாசிக்கும். திங்கள்—சந்திரன். இனன்—சூரியன். வட்ட உரு. வட்டவடிவமான. வான்—ஆகாயம். வளி—காற்று. பசு—ஆன்மா. எட்டு உரு—அஷ்ட முகூர்த்தம். அங்கனை—பெண்.*

47. வள்ளல்களுக்கும் — உபகாரம் செய்யப்பெற்றவர்களுக்கும்

கூருமுன் னீகையருங் கொண்டவருந் தம்முயிர்கைம்
மாரு வழங்கு மயிலேயே—சேருன
கட்டங்கத் தாருடையார் கான்மாறி யாடியகைக்
கட்டங்கத் தாருடையார் காப்பு.

(1) *தம் உயிர் கைமாரு வழங்கும்—தமது உயிருள்ளவரை இல்லையெனக் கை மறியாது கொடுக்கும்.* (2) *தமது உயிரையும் கைம்மாருகக் கொடுக்கும் கள் தங்கு அதார் உடையார்—தேன் பொருந்திய விசேட*

மான மலர் மாலையை அணிந்துள்ளவர். கை கட்டங்கத்தார்—கையில் கட்டங்கம் என்னும் யோகசாதனத்தை உடையவர். உடையார்—அடியார்களை ஆளாக உடையவர். சிவபெருமான் கால்மாறி ஆடியதைத் திருவிளையாடலில் 24-வது கான்மாறியாடிய படலத்திற் காண்க. அதற்குச் செய்யுள் பின் வருமாறு:—

"நின்றதாளெடுத்துவீசியெடுத்ததாணிலமீதூன்றி
யின்றுநான்காணமாறியாடியென்வருத்தமெல்லாம்
பொன்றுமாசெய்தியன்றேற்பொன்றுவலென்னுவன்பிற்
குன்றனுன்சுரிகைவாண்மேற்குப்புறவீழ்வேனென்னு (20)

நாட்டினுன்குறித்துப்பாயநண்ணுமுன்னிடத்தாளூன்றி
நீட்டினுன்வலத்தாள்வீசிநிருமலன்மாறியாடிக்
காட்டினுன்கன்னிநாடன்கவலையும்பாசமூன்றும்
வீட்டினுன்பரமானந்தவேலையுள்வீட்டினுனே" (21)

48, கௌமாரசமயத் தீவிரபக்தர்களுக்கும், தலைவனுக்கும்.

மாகாந்தர் சேந்தனேயும் மாதரையு மாறிருபொன்
வாகாவென் ருேது மயிலேயே—யோகாந்த
மோனவழி யுற்ருர் முயறவ மீண்டுநிறை
வானவழி யுற்ரு ரகம்.

மாகாந்தர் — கௌமார சமயத் தீவிர பக்தர்கள். சேந்தன்—குமாரக் கடவுள். ஆறு இரு பொன் வாகா—பன்னிரண்டு அழகிய தோள்களை உடையவனே. (வாகு—தோள்) (2) ஆறு இரு பொன் வா கா — கோபம் தணிவாயாக! அமர்வாயாக! இலக்குமி போன்றவளே!

அருகில் வருவாயாக! என்னை இத்தருணம் காக்கக்கட வாய்! அல்லது சோலைக்குச் செல்வோம் வருவாயாக. யோகாந்தம்-ஷடாந்தத்தில் ஒன்று. உற்றுர்-(1) பொருந் தியவர். (2) அடைந்தவர்.

49. நுதலணிக்கும்—தயிர்கடை தாழிக்கும்.

முத்தணி புல்லகமும் மூரலார்முன் மந்தினியும்
மத்தக மார்க்கு மயிலையே—முத்தியளி
கண்டிகையா ரெண்டோளார் மூர்க்கரைக் கூடித்தங்
கண்டிகையா ரெண்டோளார் காப்பு.

புல்லகம் — நுதலணி. மூரலார் — நகைமுகமாதர். மந்தினி—தயிர்கடைதாழி. மத்தகம் ஆர்க்கும்—நெற்றியில் கட்டும். (2) மத்து அகம் ஆர்க்கும்—மத்து உட் சென்று (புலி உறுமுதல் போல்) ஒலிக்கும். கண்டிகை- உருத்திராக்கப்பதக்கம். எண்தோள் ஆர்—எட்டுத்தோள் களுடையவர். தம் கண்திகையார் எண் தோளார்—தமது கண் கலக்கமடையாதவர்களின் எண்ணங்களைத் துளைத்து வீணுக்காதவர்.

50. (விண்ணிற்கும்-சேடியர்க்கும்-யோகிகட்கும்)
(முப்பொருள்)

சீதமுறை விண்ணகமுஞ் சேடியரும் யோகிகளும்
மாதவரை யேந்தும் மயிலையே—நாதவரை
தாண்டினருக் கங்கொளியார் தாமடியார்க் கிங்கெளி
வேண்டினருக் கங்கொளியார் வீடு. [யார்

சீதம்—மேகம், (1) மாதவர் — பெரிய (வான)வில். (2) மாது அவர்—மடந்தையர். (3) மாதவர் — ஸ்ரீ மகா

விஷ்ணு. நாதவரை—நாத எல்லை. ஒளியார்—(1) நாதங் கடந்த ஜோதிவடிவானர். (2) தம்மை மறைத்துவையா தவர்.

51. (குயிலுக்கும்—உப்பிற்கும்—புருவத்திற்கும்) (முப்பொருள்)

காவிற் குயிலுங் கடலமுதும் வாணுதலும்
மாவிலை யாரு மயிலையே—பூவிற்
பொலிகுழலார் பாலணைந்தார் பூங்கொன்றை பார்த்தே
மலிகுழலார் பாலணைந்தார் வாழ்வு.

கா—சோலை. கடல் அமுது—உப்பு. வாள்நுதல்—ஒளி பொருந்திய நெற்றி. (1) மா இலை ஆரும்—மாந் தளிரைத் தின்னும். (2) மா விலை ஆரும்—சிறந்த விலையுடைய பொருளாகப் பொருந்தும் (அல்லது) மா இ(ல்)லை ஆரும்-இலக்குமி வாசம் செய்கின்ற இல்லத்தை அடையும். (3) மா வி(ல்)லை ஆரும்—அழகிய வில்லை ஒத்திருக்கும். பூ இன் பொலி குழலார்—பூவால் விளங்குகின்ற கூந்தலையுடைய பார்வதியார். பால் அணைந்தார்—திருமேனியின் ஒரு பாகத்தில் பொருந்தப் பெற்றவர். பூ கொன்றை பார்த்தே மலி குழலார் — ஆனாய நாயனார். பால் அணைந்தார் — பக்கம் சென்றவர். இறைவன் அங்ஙனம் அணைந்தமையைப் பின்வரும் பெரிய புராணச் செய்யுளாலுணர்க:—

"ஆனாயர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானாய திருவுள்ள முடையதவ வல்லியுடன்
கானாதி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.

திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே
யசையவெழுங் குழலொலித் தஞ்செழுத்தாற் றமைப்பரவு
மிசைவிரும்புங் கூத்தனா ரெழுந்தருளி யெதிர்நின்றார்.

(ஆனாயநாயனார் புராணம்—38, 39)

52. (ஜனங்கட்கும் - வண்டிற்கும் - பூவிற்கும் -
நீர்வாழ்வனவற்றிற்கும் 4)

மாக்களும்வண் டுந்தார் மகரமுதன் மீனினமும்
மாக்கடலை யாரு மயிலையே—சாக்கியர்தீங்
கல்லா லடியுற்றார் கற்றவர்மெய்ச் சார்புணரக்
கல்லா லடியுற்றார் காப்பு.

(1) மாக்கடலை ஆரும்—மாவாதற்குரிய கடலையை உணவாக்கி உண்ணும். (2) மா கள் தலை ஆரும்–மேன்மையாகிய தேனை முதன்மையாக உண்ணும். (3) மா)க்கள் தலை ஆரும்—குழந்தைகளின் தலையில் பொருந்தி இருக்கும். (4) மா கடல் ஐ ஆரும்—பெரிய கடலை இடமாகக் கொண்டு தங்கும். சாக்கியர்—சாக்கிய நாயனார். தீங்கல்—இறைவனுக்கு இனிமையையும் தனக்கும் இன்பவடிவமான முத்தியைத்தருவதற்குக் காரணமாய்ச் சாக்கிய நாயனார் எறிந்தகல். கற்றவர் மெய் சார்பு உணர - நான்மறை ஆறங்கமுதற் கற்றவர்களாகிய சனகாதி முனிவர்கள், ஆன்மாக்களுக்கெல்லாம் உண்மையான பற்றுக்கோடாயுள்ளவன் சிவபெருமான் ஒருவனே என்று உணரும் வண்ணம். கல் ஆல் அடி உற்றார் — கைலையில் கல்லால விருக்ஷத்தின் கீழ்த் தங்கியவர். "கல்லா னிழன்மலை வில்லா ரருளிய பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே,"

என்னும் சிவஞானபோதக் காப்புச் செய்யுளைக் காண்க. சாக்கிய நாயனார் கல்லெறிந்ததனைப் பின்வருஞ் செய்யுள்கள் கொண்டுணர்க.

"வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்."

"கொண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகையெறிய
வுண்டிவினை யொழித்தஞ்சி யோடிவரும் வேட்கையொடுங்
கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்காற்
றெண்டரெதிர் நெடுவிசும்பிற் றுணைவியொடுந் தோன்றினார்."

(சாக்கிய நாயனார்—16)

53. சயனத்திற்கும்—சோலைக்கும்—கடலுக்கும்

போதலருஞ் சட்டகமும் பூம்பொழிலுஞ் சாகரமும்
மாதரணி தோன்று மயிலையே—காதரணி
வன்னித் தலையார் மறைமொழிவேட் பார்க்கரிய
வன்னித் தலையார்தம் வாழ்வு.

போது பூவலரும் பருவத்தரும்பு. சட்டகம்-சயனம். பொழில்—சோலை. சாகரம்—கடல். மாதர் அணி தோன்றும்—மாதர்கள் அணிந்திருந்த ஆபரணங்கள் (2) மாதர் அணி—விரும்பத்தக்க அழகு. (3) மாதரணி-சிங்கராசியாதிபதியாகிய சூரியன். மா-சிங்கராசி. காது அரணி வன்னி தலை ஆர் மறைமொழி வேட்பார் — கடைகின்ற அரணியால் தோன்றுகின்ற அக்னியினிடமாகப் பொருள் நிறைந்த வேத விதிப்படி (மறைந்துள்ள) உட்கருத்துக்களை அறியாது சொற்பொருளை மட்டும் அறிந்து) யாகஞ்

செய்பவர்கள். வன்னி தலையார்—வன்னிப் பத்திரத்தை சிரசில் சூடிக்கொண்டிருப்பவர்.

54.

**கூவிவருங் காற்றினிலுங் கோடையுறு போதினிலும்
வாவியிலை யாடு மயிலையே—கூவிளமார்
சந்த முறித்தார் மருவுதரத் தார்பகலோன்
தந்த முறித்தார் தலம்.**

வாவி இலை ஆடும்—தாவி இலைகள் அசையும். வாவியில் ஐ ஆடும்—தடாகத்தில் நீர் அலை வீசும். கூவிளம்—வில்வம். சந்த முறி தார் மருவு தரத்தார்—அழகிய இலைகளாகிய கண்ணி பொருந்திய சிரத்தையுடையவர். பகலோன்—சூரியன். தந்தம்—பல். முறித்தார்—தகர்த்தார். சூரியன் பல்லைத் தகர்த்தது தக்ஷயாகத்தில்.

55. (இரப்போர்க்கும்—வணிகர் மனைக்கும்)

**கல்லை யுறுகரத்துங் காப்பார் வணிகரில்லும்
மல்லை நிரம்பு மயிலையே—தில்லையினில்
ஆடுகந்த புண்டரிக மங்கதத்தோ டன்புவிளை
வீடுகந்த புண்டரிகன் வீடு.**

கல்லை—உண்கலம். கரம்—கை. காப்பு ஆர்—காத்தலைப் பொருந்தியுள்ள. இல்—வீடு. மல்லை—இரப்போர் கலம். (2) மல் ஐ—வருவாய் (வரவு) அழகாய். தில்லை—சிதம்பரம். ஆடு உகந்த—ஐந்தொழில் நடனம் புரிதலை விரும்பிய. புண்டரிகம்—வியாக்கிரபாத முனிவர். அங்கதம்—பதஞ்சலி முனிவர். அன்பு விளைவீடு உகந்த

புண்டரிகன்—அன்பு செய்வதன் பயனாகிய மோக்ஷத்தை மகிழ்ந்தளிக்கும் திருவடித்தாமரையை உடைய சிவபெருமான். (1) புண்டரிகம்—புலி. (2) தாமரை. தில்லையில் வியாக்கிரபாதரும் பதஞ்சலியாரும் காண நடராஜன் நடனம் புரிதலைப் பின்வரும் செய்யுளால் உணர்க:—

"சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி."

(சேக்கிழார் நாயனார் புராணம்-பாயிரம்–2)

56. தாமரைக்கும் — மரக்கலத்திற்கும்.

கட்டவிழுந் தாமரையுங் கார்கோட் கரைக்கலமும்
மட்டமளிக்கு மயிலையே—இட்டமொடன்
பாலங்காட் டானானன் பார்த்திடுமைக் காடுதிரு
வாலங்காட் டானன் அகம்.

கட்டு அவிழும் தாமரை மட்டு அம் அளிக்கும்–தேன் கட்டு அவிழப் பெறுகின்ற தாமரைமலர் தேனாகிய நீரினைத் தருகின்றது. கார்கோள் — கடல். கலம் — மரக்கலம். (2) மட்டம் அளிக்கும் — வாலக்குதிரைகளை அல்லது ஆண் யானைக் குட்டிகளைக் கொடுக்கின்றது. இட்டம் ஒடு–விருப்பினொடு, அன்பால் அங்கு ஆள் தான் ஆனான்—அன்பின் காரணமாக மதுரை வைகையின் பெருக்கால் அழியவந்த காலத்தில் (வந்தியென்னும் கிழவிக்கு) கூலி ஆள் ஆனவன். உமை — பார்வதி. திருவாலங்காடு ஆனான்—திரு ஆலங்காட்டில் குறையாதிருப்பவன்.

57.

தன்னிகரில் சாறுகாணச் சாற்றுதவப் பேறடைவான்
மன்னவரங் கண்ணு மயிலையே—யென்னிதயக்
கஞ்சமுறு மானிடத்தார் கண்காணத் தேசிகராய்த்
தஞ்சமுறு மானிடத்தார் சார்பு.

சாறு—திருவிழா. சாற்றுதவபேறு—நூல்கள் கூறுகின்ற மிகுந்த பாக்கியங்களை அல்லது தவப்பயனை. அடைவான் — அடையும் பொருட்டு. (1) மன்னவர் அங்கு அண்ணு — அரசர்கள் அவ்விடத்திற் செல்லுகின்ற. (2) மன்ன வரம் கண்ணும் — நிலைபேறுடைய அல்லது நிலைபெற வரங்களைக் கருதுகின்ற. இதயகஞ்சம் — இருதய கமலம். மான் இடத்தார் — மானினை இடது கையில் உடையவர். தஞ்சம் உறு—பக்குவ ஆன்மாக்களுக்குப் புகலிடமாகப் பொருந்தியுள்ள. மானிடத்தார்—மானிட வடிவில் வந்தவர்.

58. தேர்ப்பாகருக்கும்—நகர் காவலருக்கும்.

கந்துகஞ் சூதருங் காவனெறி நிற்போரும்
மந்துரை யாக்கு மயிலையே—தந்தியுரி
போர்த்தரை யார்த்த புலித்தோலார் புரிசடைசேர்
தீர்த்தரை யார்தமது சேர்வு.

சூதர்—தேர்ப்பாகர். கந்துகம்—குதிரை. (1) மந்துரை யாக்கும்—குதிரைச் சாலையில் கட்டுகின்ற. மந்து உரை ஆக்கும்—அரசனது ஆணைப்படி செய்யும். தந்தி உரி-யானைத்தோல். புரிசடை—கட்டியசடை. தீர்த்தர்—கங்காநதியை உடையவர். ஐயார்—கடவுளார்.

59. (நாகரீகருக்கும் — கூந்தலுக்கும்)

நேயமதா னுகரிகர் நீலவிழி யாரைம்பான்
மாயவற்கே யொப்பா மயிலையே—சாயுச்ய
தான மருப்பணிந்தார் தங்கட் கருளிறையோன்
ஏன ம்ருப்பணிந்தா ரில்.

நாகரிகர்—மிகமிக உயர்ந்த மக்கட் பண்பை உடையவர்கள். ஐம்பால்—கூந்தல். (1) மாயவற்கு ஏ – திருமாலுக்கே. (2) மாய அல் கு ஏ—மாயத்தின் தண்மையை உடைய இருட்டுக்கே. சாயுச்ய தானம்—சாயுச்ய பதவி. அரு பணிந்தார்—அருவத்தை ஜோதிமயமாய்ப் பணிந்தவர்கள். ஏனம் மருப்பு—வராகத்தினது கொம்பினை.

60. சோலைக்கும் — பண்புடையார்க்கும்.

பம்பிவளர் சோலையிலும் பண்புடைமை மேவினரும்
வம்புமலர் வீசு மயிலையே—அம்புவியில்
பத்தியொடு போதமானுப் பாதமிட வீடருளுஞ்
சித்தியொடு போதமானுர் சேர்வு.

பம்பி—எழுந்து; பரவி. மலர் வம்பு வீசும்—புஷ்பம் நறுமணத்தைப் பரப்பும். (2) வம்பும் அலர் (உம்) வீசும்—வீண் பேச்சினையும் பழிச் சொற்களையும் ஓதுக்கும். அம்புவி—அழகிய நிலவுலகம். (1) போது அம் ஆனு பாதம்—மலரினை அழகு குன்றுத திருவடியில். வீடு—மோக்ஷம். சித்தியொடு போதம் ஆனுர்—எல்லாச் சித்திகளும் ஞானமும் ஆகியவர். (சிவஞான சித்தியார், சிவஞான போதம் என்னும் இரு சித்தாந்த நூல்களின் பொருளாயுள்ளவர்.

61. வணிகர்க்கும் — மங்கையர் நுதலுக்கும்.

தேங்குபொருட் கெட்டியரும் தேங்கோதை யார்நுதலும்
வாங்குவிலை நேரு மயிலையே—யேங்கி
மறுதகுலைக் கொண்டார் மயனீங்கித் தேர்வான்
அறுகுதலைக் கொண்டா ரகம்.

எட்டியர்—வணிகர். நுதல்—புருவம். (1) வாங்கு விலை நேரும்—வாங்கிய விலைக்குத்தரும். (2) வாங்கு வில் ஐ நேரும்—வளைந்த வில்லை ஒக்கும். மறுகுதல்—கலங்குதல். மயல் நீங்கி—மயக்கம் ஒழிந்து. தேர்வான்—தேரும் பொருட்டு. அறுகு தலை கொண்டார்—அறுகம் புல்லைத் தலைமேல் கொண்டவராகிய சிவபெருமான்.

62.

மீனேரைக் கண்டும் விளைபயனன் காய்ந்தோரும்
வானேருஞ் சீர்கொள் மயிலையே—தானேர்
அகத்திய னந்தியுண் டர்ச்சிக்குஞ் செவ்வா
னகத்திய னந்தியுண் ணகர்.

மீனேரைக் கண்டு வானேரும் சீர்கொள் — பரதவரைப் பார்த்துத் தேவர்களும் அவர்கள் தரும் சீர் வரிசைகளைப் பெறுகின்ற. விளை பயன் நன்கு ஆய்ந்தோர் வான் ஒரும் சீர் கொள்—கொடையின் பயனை நன்ருக ஆராய்ந்தறிந்தவர்கள் சிறப்பாகக் கருதப்படுகின்ற புகழினை அடைகின்ற. அந்தி—அத்தி—கடல். செவ்வானகத்து இயல் நந்தி உள் நகர்—செவ்வானத்தினது தன்மையையுடைய சிவபெருமான் வசிக்கின்ற (சிறப்பாகக் கருதுகின்ற) நகரம்.

63. செய்ந்நன்றிக்கும்—சிவஸ்தலத்துக்கும்.

நன்றிதினை செய்திடினந் நன்றியுமா டோர்தலமும்
வண்குன்றை நேரு மயிலையே—மன்றினெழு
வானிழலாற் சேக்கிழார் மாபுராணம் பாடவருள்
வானிழலாற் சேக்கிழார் வாழ்வு.

தினை—தினையளவு. மாடு ஓர் தலம்—அருகில் உள்ள ஒரு சிவஸ்தலம் (1) வண் குன்று ஐ நேரும் – வளப்பமுள்ள குன்றின் அளவை அடையும். (2) ஞானவளம் பொருந்திய குன்றத்தூராகப் பொருந்தும். குன்றத்தூர் என்பது சேக்கிழார் பெருமான் அவதாரம் செய்தருளிய திருத்தலம். மன்றின்—பொன்னம்பலத்தில். எழு வான் நிழல்—எழுந்த ஆகாயவாணியாகிய திருவருட் பரவயிந்து வத்திருவாக்கான "உலகெலாம் உணர்ந்தோ தற்கரியவன்" என்னும் மெய்ம்மொழி. (1) சேக்கிழார்—திருத்தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாவது திருமுறையைப் பாடியருளியவர். மாபுராணம்—பெரிய புராணம். (2) வால் நிழல் ஆன் சே கிழார்—வெள்ளிய ஒளியுடன் கூடிய இடப வாகனத்தை உரிமையாக உடையவர். 'ஆன்' உருபு 'ஓடு' உருபின் பொருளில் வந்தது. சே—இடபம். பின் வரும் மேற்கோட் செய்யுளைக் காண்கவும்

" அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
மருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளி னாகு மெனப்புகல் வாமன்றே."

(பெரிய புராணம்)

64. ஓவியர்க்கும் — மங்கையர்க்கும்.

தன்னிகரில் லோவியர்கண் சாறுமொழித் தையலர்பால்
வன்னிகை யாரு மயிலையே—துன்னி
மலம்பொலி காட்டினுன் மாளாம லுய்யச்
சிலம்பொலி காட்டினுன் சேர்வு.

ஓவியர்-சித்திரம் வரைவோர். சாறு கருப்பஞ்சாறு. தையலர்பால்-பெண்களிடத்தில். (1) வன்னிகை ஆரும்- எழுதுகோல் பொருந்துகின்ற (2) வன்னி கை ஆரும்— கிளி கையினிடம் தங்குகின்ற. துன்னி—அடைந்து. மலம் பொலி காடு இல் நான்—மும்மலங்கள் (ஆணவம், மாயை, காமியம்) நிறைந்துள்ள காடு என்று சொல்லும் படியான உடலில் நான். உய்ய—பிழைக்க. (வீடுபேறு அடைய). சிலம்பு ஒலி காட்டினுன் — பொன் அம்பலத்தில் ஆடும்போது உண்டாகின்ற சிலம்பினது ஓசையைக் காட்டித்தந்தவன்.

65.

வைகலும் மேற்றிசைக்கண் வந்துந்தன் பாலெவரும்
வைகத்தன் கோடீர் மயிலையே—மைகடவு
வேளோங்கா ரத்துரையார் வேட்டங் கயற்கணிசேர்
வாளோங்கா ரத்துரையார் வாழ்வு.

வைகலும் வைகத்தன் மேற்றிசைக்கண் வந்து கோள் தீர் — நாள்தோறும் துவாதச ஆதித்தருள் ஒருவனுகிய வைகத்தன் என்பவன் மேற்குத் திசையில் வந்து இருளைப் போக்குகின்ற. தன்பால் எவரும் வைக தன் கோள் தீர்— தன்னிடத்தில் (திருமயிலையில்) யார் வசித்தாலும் தனது

குற்றங்களைப் போக்கிக்கொள்ளுகிற. மை கடவு வேள் ஓங்காரத்து உரை ஆர்—ஆட்டுக்கடாவின் மேல் இவர்ந்தவராகிய முருகப்பெருமானால் பிரணவத்தின் பொருள் உபதேசிக்கப்பெற்றவர். வேட்டு அங்கயற் க(ண்)ணி சேர் வாள் ஓங்கு ஆர துரையார்—விரும்பி மீனாக்ஷி அம்மையார் சேர்ந்திருக்கின்ற ஒளி வளர்கின்ற பதக்கத்தை அணிந்துள்ள பெருமான் ஆனவர்.

66. புலவர்க்கும் — தாமம் அமைப்போர்க்கும்

மன்னுபுகழ்க் கம்பனிகர் வாருந்தார் வாணரும்வேய்
வன்னனை தேரு மயிலையே—தென்னைவளர்
கொங்குலவு காஞ்சிக் குடத்திலைப்பே ரூரர்லிங்
கங்குலவு காஞ்சிவரர் காப்பு.

நிகர்வார்—ஒப்பாவார் தார்வாணர்—பூத்தொடுக்கும் தொழிலோர். வேய் வன்னனை தேரும் — கவனம் செய்தற்கு வருணனைகளைத் தேர்கின்ற. (2) வேய்வல் நனை தேரும்—மலர்தல் வல்ல அரும்புகளை ஆராயும். கொங்கு—கொங்கு நாடு. (1) காஞ்சி—பேரூர் என்னும் தலத்தில் ஓடும் நதி. குட தி(ல்)லை—மேலைச் சிதம்பரம். பேரூர்—பெரிய ஊர்; பெருமை வாய்ந்த விசேட சிவஸ்தலம். (2) காஞ்சி—காஞ்சிபுரம். வரர்—சிவபெருமான்.

67. பஞ்சாங்க கணிதர்க்கும்—மகளிர் நாவிற்கும்

ஆக்கும்பஞ் சாங்கத்து மங்கனையார் நாவினிலும்
வாக்கிய மேற்கொண் மயிலையே—நோக்கிவரும்
ஆரத் தருவா ரசலத் தமிழ்மூன்றும்
ஆரத் தருவா ரகம்.

பஞ்சாங்கம்—திதி, வார, நக்ஷத்திர, யோக, கரணங்கள். வாக்கியம் மேற்கொள்—வாக்கிய ஸித்தாந்தைப் பாராட்டுகின்ற. அங்கனையார்—மங்கையர். (2) வாக்கு இயம் மேல்கொள் — வாக்கு வாச்சியத்தினை வெல்லுகின்ற. நோக்கு இவரும் ஆரதரு ஆர் அசலத் தமிழ் மூன்றும் — அழகு மேம்படுகின்ற சந்தன மரங்கள் பொருந்திய (பொதிய) மலையிற்றோன்றிய இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும். ஆர தருவார்—நிரம்பக் கொடுப்பவர்.

68. பேயாழ்வாருக்கும் — புன்னைமலருக்கும்

வாணகனைக் கண்டவரும் வாய்ந்தபுன்னை நன்மணமும்
மாணவதா ரஞ்செய் மயிலையே—தாணுவாய்
மாதவனுங் கேசவனும் வானவனு மாய்மன்னு
மாதவனுங் கேசவன்றன் வாழ்வு.

வாணகன் ஐ கண்டவர் மாண் அவதாரம் செய்-திருமாலைக் கண்டவராகிய பேயாழ்வார் மாட்சிமையொடு திரு அவதாரம் செய்தருளிய. பேயாழ்வார் திருமாலைக்கண்ட வரலாற்றிற்கு அகச்சான்று:—

“ திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. ”

(மூன்றாந்திருவந்தாதி—1)

மாண் நவ தாரம் புன்னை நன்மணம் செய்—மாண்பும் புதுமையும் பொருந்திய தாரம் என்னும் இசை புன்னை மலரினது நறுமணத்தைச் செய்கின்ற. தாணு — சிவ பெருமான். மாதவனும் கேசவனும்—மாதவப்பெருமாள், கேசவப்பெருமாள் என்னும் பெயர்களைக் கொண்டு திரு மயிலையிலுள்ள விஷ்ணு வடிவமுள்ளவனும். வானவன்—பிரமன், இந்திரன், சூரியன் இவர்களாகவும் உள்ளவன். மன் உமாதவன் ஆம் கேசவன் — நிலைபேறுடையதான பார்வதி தவஞ்செய்து பெற்ற கணவனும் சக்தியை உடைய வனும் ஆகியவன். "கேச" என்ற பதம் சக்தி என்னும் பொருளுடையது என்பதனை விஷ்ணு ஸகஸ்ரநாம சங்கர பாஷ்யத்தில் பார்த்தறிக. (649-வது நாமம்) தாரம் — மூக்கால் பிறக்கும். யானைக்குரல் உவமம். மாதுளங்கனி, சுவை உவமை. புன்னை வாசனை உவமை. அக்கரம் ஔ உ. மாத்திரை இரண்டு. இறைவன் ஈசன்.

69.

வார்குழலார் பொய்கையினில் வண்பத்ரதி தம்மினத்தார்
மார்கழி நீராடு மயிலையே—சீர்கொள்
மதியிரவிக் கண்ணுறுவான் மாற்றுவகை காட்டு
மதியிரவிக் கண்ணுறுவான் வாழ்வு.

வார்குழலார் பொய்கையினில் மார்கழி நீர் ஆடும் — நீண்ட கூந்தலை உடைய நங்கைமார் குளத்தில் மார்கழி மாதத்தில் ஸ்நானம் செய்கின்ற, பரத்தி தம் இனத்தார் மார்கழி நீர் ஆடும்—துளைச்சியர் கூட்டம் மார்பளவிற்கு

மேலுள்ள நீரினிடம் (மார்பினுல் உந்திக் கழிகளில்) நீர் விளையாட்டைப் புரிகின்ற. சீர்கொள் — சிறப்பினைக் கொண்ட. மதி இரவி கண் உறுவான் மாற்று வகை காட்டு—சந்திரகலை சூரியகலையைச் சாருமாறு காட்டிய ("சந்திரனைத் திரு அடியால் தளர்வித்தான்காண்" — திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்—9) மதி இரவி கண் உறு ஆன்—சந்திரனையுஞ் சூரியனையுங் கண்ணுக அடைந் தவன்.

70. மயிலைவாசிகட்கும்—மங்கையர் நடைக்கும்.

வாசிகள் மாலையும் வாணுதலார் தந்நடையும்
வாசுரை மானு மயிலையே—தேசுதன்னை
மெய்ப்பினில்வைப் பானுன் மெலிந்திரங்குங் காலெனக்
கெய்ப்பினில்வைப் பானு ணிடம்.

வாசிகள் மாலை வாசு உரை மானும் — (மயிலையில்) வசிப்பவர்களுடைய ஒழுக்கம் கடவுளுடைய வாக்கியமாகிய வேதாகமங்களிற் கூறியதை ஒக்கின்ற. (2) வாசுரை— பெண் யானை. தேசு தன்னை மெய்ப்பினில் வைப்பான்— ஒளியாகிய தன்னை உண்மையில் வைத்தருள்பவன். நான் மெலிந்து இரங்கும் கால்—நான் மெலிவுற்று வருந்தும் பொழுது. எய்ப்பினில் வைப்பு ஆனுன்—இளைத்தவிடத்தில் (வறுமையுற்ற காலத்தில்) சேமித்து வைத்த நிதிக்கு ஒப்பானவன்.

71. விநாயகர்க்கும்—பழையரில்லங்கட்கும்.

தந்திமுகற் கெவ்வயினுஞ் சார்துவசர் வாழிடமும்
மந்திர மாரு மயிலையே—இந்திரவி
மானத்தான் மன்னுவரன் மல்கறஞ்சே ரிந்திரவி
மானத்தான் மன்னுவரன் வாழ்வு.

தந்திமுகற்கு எ வயினும் மந்திரம் ஆரும் — யானை முகக் கடவுளாகிய விநாயகருக்கு எவ்விடத்திலும் கோயில் பொருந்தியிருக்கின்ற. துவசர் வாழிடம் மந்திரம் ஆரும் — கள்விற்போர் வசிக்கின்ற இடத்தில் கள் நிறைந்திருக்கும். அல்லது குடிக்கப்படும். இந்து இரவி மான தான் மன்னு வரன் மல்கு — சந்திர சூரியர்களைப்போல நிலைபெற்ற வரங்களைப் பெருக்கும். இந்திர விமானத்தான் — இந்திரன் அமைத்த விமானத்தினை உடையவன். மன்னு அரன் — நிலை பேறுடைய சிவ பெருமான்.

72.

பேசறியா மூகரும் பேறுபெறு வோருமுறை
வாசபதி யாகு மயிலையே—கூசி
வணங்கார் முகம்வரைந்தான் வானெடுமண் வீயா
வணங்கார் முகம்வரைந்தான் வாழ்வு.

மூகர் முறை வாசபதி ஆகும் — ஊமையர் நாட்கிரமத்தில் வியாழபகவனுகின்ற. பேறு பெறுவோர் உறை வாச பதி ஆகும் — பதினாறு வகைப்பட்ட செல்வங்களை அடைய விரும்புகின்றவர்கள் தங்கி வசித்தற்கு யோக்யமான நகரம் ஆகின்ற. வணங்கார் முகம் வரைந்தான் — வணங்காதவர்களைத் தன் இடத்தினின்றும் நீக்கினவன். வீயா வ(ண்)ணம் கார்முகம் வரைந்தான் — இறவாதபடி (மேருமலையாகிய) வில்லைக் கொண்டவன்.

73. நெய்தல் வருணனே.

மிக்குமடி கண்டனிழன் மீனினங் கண்டுவெரு
வக்கொக்கு மானு மயிலேயே—அக்கோ
டரவரை மேலுடையான் அங்கையிற் சூலோன்
கரவரை மேலுடையான் காப்பு.

மிக்கு மடி கண்டல் நிழல் மீன் இனம் கண்டு வெருவ கொக்கு மானும் — மிகவும் மடிங்கியிருக்கின்ற தாழை யினது நிழலே மீன் கூட்டங்கள் பார்த்து அஞ்சும்படி கொக்கின் உருவத்தைப் போன்றிருக்கின்ற. அக்கு ஓடு அரவு அரை மேல் உடையான் — சங்கு மணிகளேயும் பாம்பினேயும் அரையிற் கச்சாக ஆர்த்துள்ளவன். அம் கையில் சூலோன் — அழகிய கையில் மூவிலேச் சூலத்தை உடையவன். கர வரை மேல் உடை ஆன் — யானே உரிவையை மேலாடையாகப் போர்த்துள்ளவன்.

பின்வரும் செய்யுளடிகளேக் காண்க:—

“அக்கிருந்த அரை”– திருத்தலேயாலங்காட்டுத்திருத்தாண்டகம்.

“அக்கரவ மரைக்கசைத்த வம்மான் கண்டாய்”— திருவலஞ்சுழியும் திருக்கொட்டையூர்க் கோடீச்சரமும்.

74. அரனுக்கும்-மாலுக்கும்-கடலுக்கும் (முப்பொருள்)

கந்தரங்கொண் டம்பிகையார் காட்சியொடு கோக்குடையாய்
வந்தரன்மாற் சிந்தேய் மயிலேயே—செந்துவர்வாய்
அல்லார்கட் செல்லா ரளகத்தார் சூழறவிர்க்
கல்லார்கட் செல்லா ரகம்.

கந்தரம் கொண்டு அம்பிகை ஆர் காட்சி ஒடு (ஆன் பொருளில் வந்தது) — நீரைத் தலையிற்கொண்டு பார்வதியார் பொருந்திய கோலத்தால். (2) மேகத்தால் கொள்ளப் பட்டு ஓடம் தன்னிடத்தில் தங்குகின்ற காட்சியால், அரன் சிந்து ஏய்—சிவபெருமான் கடலை ஒக்கின்ற. (1) கோ குடையாய் வந்து—கோவர்த்தனகிரி குடையாக வாய்க்கப்பெற்று. (2) கோகு உடை ஆய் வந்து-பூமிக்கு ஆடையாகச் சேர்ந்து. மால்சிந்து ஏய்—திருமால் கடலை ஒக்கின்ற. துவர்வரய்—பவளம் போன்ற இதழ். அல் ஆர் கண்—கருமை (அஞ்சனம்) பொருந்தியகண். செல் ஆர் அளகத்தார்-மேகம் போன்ற-கூந்தலையுடைய மகளிர். சூழல் தவிர்க்க அல்லார்—சூழ்ச்சிகளை விலக்கும் ஆற்ற லில்லாதவர்கள். கண்-ஏழன் உருபு. செல்லார்—செல் லாதவர்.

75. கடலுக்கும்—நான்முகனுக்கும்

பாரதிநா வாயுறலால் பல்கலையு மோதுவதால்
வாரியய னுகு மயிலையே—பாரினரி
மாவினுரு வாக்கினுன் வானின் றுலகெலாமென்
பாவினுரு வாக்கினுன் பற்று.

(1) பாரதி நாவாய் உறலால் பல்கு அலையும் மோதுவதால்—ஓடங்களும் மரக்கலங்களும் பொருந்தியிருப்பதாலும் மேலும் மேலும் பெருகிவருகின்ற அலைகள் கரையினை மோதுதலாலும். (2) பாரதி நாவாய் உறல் ஆல் பல் கலை உம் ஓதுவது ஆல் — நாமகள் நாவினிடத்தில் மெய்ம்மை பொருந்தத் தங்குவதாலும் பல சாத்திரங்

களையும் கற்பதாலும் அல்லது மொழிவதாலும். வாரி அயன் ஆகும் — கடல் பிரமன் ஆகின்ற. பாரின் கரி மா இன் உரு ஆக்கினுன் – நிலவுலகில் கரிகளை குதிரைகளின் வடிவமாகச் செய்தவன். வான் நின்று — பரமாகாசத் தில் இருந்து. 'உலகெலாம்' என்பா இன் உரு வாக்கினுன் — "உலகெலாம்" என்ற முதற் குறிப்பினை உடைய செய்யுளை இனிய உடலாகக்கொண்ட மெய்ம்மொழியை உடையவன். அச் செய்யுள் வருமாறு:—

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவியநீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

(திருத்தொண்டர்-பாயிரம்–1)

76. கடலுக்கும் — சிவபெருமானுக்கும்.

மாஞக மத்துறலான் மாலூர்ந்து நீர்கொளான்
மாநீர் சிவனேர் மயிலேயே—கானீங்கின்
வெய்யவுள வெண்குணத்தான் வேண்டாவிப் புன்
மெய்யவுள வெண்குணத்தான் வீடு. புலான்

(1) மால் நாகம் மத்து உறலால் மால் ஊர்ந்து நீர் கொளல் ஆல்—பெரிய மந்தரமலையானது தன்னிடத்தில் மத்தாகப் பொருந்தியதாலும் மேகமானது பரவி நீரைக் கொள்ளுவதாலும்.

(2) மான் நாகம் மத்து உறலால் — மானும், பாம்பும், ஊமத்தையும் தன் இடத்துச் சேரலாலும். மால் ஊர்ந்து நீர் கொளல் — திருமாலை ஏறிச்

செலுத்திப் பெருமையைக் கொள்ளுதலாலும். மா நீர் சிவன் நேர் — கடல் சிவபெருமானை ஒக்கின்ற. கால் நீங்கின்—பிராணன் என்னும் வாயு பிரிந்தால், வெய்ய உ(ள்)ள எண்கு உண தான் வேண்டா(த) இ புன் புலால் மெய் அ உள எண் குணத்தான் — உண்ணவேண்டும் என்ற விருப்பத்துடன் கூடிய எண்ணத்தையுடைய கரடியும் உண்பதற்குத் தான் விரும்பாத இந்த இழிவான மாமிச பிண்டமாகிய உடலின்கண் உள்ள எட்டுக் குணங்களையுடைய சிவபெருமான். மெய்ய — ஈற்றகரம் சாரியை. இறைவனது எண்குணங்களாவன:—

1. இயல்பாகவே பாசங்களினீங்குதல், 2. இயற்கையுணர்வினனாதல், 3. தன்வயத்தனாதல், 4. தூயவுடம்பினனாதல், 5. பேரருளுடைமை, 6. முடிவிலாற்றலுடைமை, 7. வரம்பிலின்பமுடைமை, 8. முற்றுமுணர்தல், என்பன.

77. தமிழுக்கும் — மயிலைக்கும்

சங்கமுறு வள்ளுவராற் சாலவகத் தீசனலார்
வங்கொடமிழ் தானேர் மயிலையே—யிங்கெவரும்
வாழியரு ணம்ப னகனெடு மாலுக்கன்
ருழியரு ணம்ப னகம்.

(1) சங்கம் உறு வள்ளுவரால் சால அகத்திசனல்—கடைச் சங்கப்புலர்களால் மிகமிக மேலான நூலென்று கொண்டாடப்பெற்ற திருக்குறளை உடைமையாலும் குடத்தினிடமாகத்—தோன்றிய அகஸ்தியரை முதன்மையாக உடைமையாலும்,

(2) சங்கம் உறுவள் உவரால் சால அகத்து ஈசனுல்—சங்குகள் பொருந்தியுள்ள வளப்பத்தைக்கொண்ட கடலை உடைமையாலும் தன்னிடத்து நிறையப் பொருந்தியுள்ள கபாலீசுவரரை உடைமையாலும். ஆர்வம் கொள் தமிழ் தான் நேர்மயிலை—அன்பைக்கொண்டுள்ள தமிழ் ஒன்றே தனக்கு ஒப்பான மயிலை (மயிலாப்பூர்.) இங்கு எவரும் வாழியர் உள் நம்பு அனகன் நெடுமாலுக்கு அன்று ஆழி அருள் நம்பன்—இவ்வுலகில் யாவரும் நித்ய வாழ்வினை அடையும் பொருட்டு உள்ளத்தின்கண் முழுமுதற் கடவுளென நம்புகின்ற நிருமலனும் ஓங்கி உலகளந்த திருமாலுக்கு அந் நாளிலே சக்கராயுதத்தைக் கொடுத்தருளிய சிவபெருமான். 'வாழியர் உண் அம் ப(ன்)னகன்' எனப் பிரித்துக் குற்றங்களினின்று நீங்கி உய்தற்பொருட்டுப் பருகுகின்ற கங்கையினையும் பாம்பினையும் தனது சிரமேல் உடையவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

78.

ஆவணியில் வேந்தனும் ஆடறலு மார்கலியின்
மாவினெளி காட்டு மயிலையே—தேவினியல்
கற்றவர்க் கேவலவன் கல்லார்க்கு மேவலவன்
கற்றவர்க் கேவலவன் காப்பு.

ஆவணியில் வேந்தன் ஆர்கலியின் மா இன் ஒளிகாட்டும்—ஆவணி மாதத்தில் சூரியன் கடலில் சிங்கவிராசியில் தோன்றித் தன்னையும் உலகத்தையும் காட்டுகின்ற. ஆடு அறல் ஆர் கலி இன் மா இன் ஒளி காட்டும் — அசைந்து தாவி வருகின்ற அலைகள் நிறைந்த ஓசையுடன் குதிரை

களின் வரிசையைக் காட்டுகின்ற. இப் பொருளுக்கு ஒளி (=ஒழுங்கு) என்பது 'ஒளி' என முதல் குறுக்கல் விகாரம் அடைந்தது. தேவின் இயல் கற்றவர்க்கு — கடவுளின் உண்மையான சொரூபத்தை அறிந்தவர்களுக்கு. ஏவல் அவன்—ஏவலைச் செய்கின்றவன். கல்லார்க்கு மேஅல் அவன் — கல்லாதார்க்கு அணுகமுடியாதவன். கல் தவர்க்கு ஏ வலவன்—மேருமலையாகிய வில்லுக்கு அம்பாக ஸ்ரீ மகாவிஷ்ணுவைக்கொண்டவர். தவர்-வில். ஏ-அம்பு. வலவன்—தேர்ப்பாகன், விஷ்ணு.

79. நெல்லுக்கும் — உப்புக்கும்

சாற்றுபாத்தி நீர்விளைந்து தானமுதா நெற்குப்பு
மாற்றிநேர் கூறு மயிலையே—கூற்றுதைத்த
தாளத்த னக்கன்றன் ருவொடுமேய்த் தார்க்கருள்வே
தாளத்த னக்கன்றன் சார்பு.

பாத்திகளில் நீரினிடமாய் விளைந்து (உண்டாகி) அமுதம் ஆவதால் நெல்லுக்கு உப்புச்சமமாகின்றது. அதனால் நெய்தல் நிலத்தவர் நெல்லுக்கு உப்பினைப் பண்டமாற்றாக விலை தந்து நெல்லுப் பெறுகின்றனர். அமுதம்—போசனம், உப்பு. அமுதம் என்பதின் கடை குறைந்து 'அமுது' என்றாயிற்று.

(1) தாள் அத்தன் — பாதத்தை உடைய தலைவன். (இடதுபாதம்.) பாதத்தில் (கூற்றை உதைத்ததால்) சிவப்புநிறம் உண்டாகப்பெற்றவன். அக் கன்று அன்று

ஆவோடு மேய்த்தார்—கன்றுகளைப் பசுக்களோடு மேய்த்தவர் சண்டேச நாயனரும் திருமூலநாயனரும் ஆவர். வேதாளத்தன் நக்கன்—பூதகணங்களையுடைய சிவபெருமான்.

80. மங்கையர்க்கும் — திருமயிலைக்கும்

தங்கண் மயிலையுற்றுச் சக்கரமுஞ் சேர்தலான்
மங்கைய ரொக்கு மயிலையே—அங்கண்
விழியிடந் தப்புவான் மேவுகை மாற்றிப்
பழியிடந் தப்புவான் பற்று.

(1) தம் கண் மயிலை (ஐ) உற்று சக்கு அரமும் சேர்தலால்—தம்முடைய கண்கள் (உவமையால்) மீனைப் போன்றும், கண்கள் அராவும் ஆயுதம் போன்றும் இருப்தால், (2) தன் இடத்துத் தேவி மயில் வடிவமாக இருக்கப்பெற்றும் கடல் சேர்ந்திருப்பதாலும். அங்கண்—அவ்விடத்து. (திருக்காளத்தி மலையிலே) இடந்து அப்புவான் மேவுகை மாற்றி — தோண்டி அப்புவதற்காகக் கண்ணினிடம் சென்ற கையைத் தனது கைகொண்டு தடுத்து. பழியிடம் தப்புவான்—பழியினின்றும் தப்பியவனகிய சிவபெருமான். இச்செய்யுளில் கண்ணப்பநாயனரது திருத்தொண்டு வந்திருத்தல் காண்க.

81. கடல் அலைக்கும் — திருமயிலைக்கும்

ஓங்கலையின் காட்சியதா லொன்ருகு மத்துவிதம்
வாங்குதிரை காட்டு மயிலையே—பூங்கணைநேர்
போதவஞ் செய்தான் புரம்பொடிசெய் நோக்குடை
மாதவஞ் செய்தான் மனை. யான்

வில். (1) நோக்கு—கண். விழ—விரும்ப. கற்பு உருவ—கற்புக்கலையும்படி. நோக்கினுர்-பார்த்தவர். சிவபெருமான் தாருகாவன ரிஷி பத்னிகளிடம் பலியேற்ற வரலாறு வந்துள்ளது காண்க.

84.

தேவினருள் பெற்றவருஞ் செவ்வழியே சோலையிலும்
மாவிசைதான் கூரு மயிலையே—கோவியறேர்
வானவ ரம்பரவர் மாண்பொருணூற் பாசுரத்தார்
வானவ ரம்பரவர் வாழ்வு.

தே இன் அருள் பெற்றவர் மா இசை கூறும்—கடவுளுடைய இனிய அருளைப் பெற்றவர்கள் பெரும்புகழ் மிகப் பெறுகின்ற. சோலையில் செவ்வழி மா இசை கூரும் — சோலையில் வண்டுகள் பாடும் செவ்வழிப் பண்ணின் இசை ஓங்குகின்ற. தே—கடவுள். செவ்வழி—நெய்தல் நிலப்பண். மா—வண்டு. கோ இயல் தேர்—அரச நீதியை உணர்ந்த. வானவரம்பர்—சேரமான் பெருமாள் நாயனுர். மாண் பொருள் நூல்-பெரும் பொருளை விஷயமாகவுடைய நூலாகிய. பாசுரத்தார்—பாசுரத்தை உடையவர். சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞான உலாவினை உடையவர். அல்லது, பாணபத்திரனுக்குச் சிறந்த பொருள் கொடுத்துவரவிடுக்குமாறு திருமுகப் பாசுரம் எழுதியவர். வான் அவர்—சிதாகாசத்தில் இருப்பவர், அம்பரவர்—அழகிய வலைஞன் வேடம் கொண்டவர்.

மேற்கோட் செய்யுள்கள்:—

"மறைக்குரை செய்தவாக்கான் மதிமலிபுரிசை யென்னுஞ்
சிறப்பியற்சீர்சால் செய்யுட் பாசுரஞ்செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமானல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வ
னுறக்கரீத் தாடிப்பாடி யுவகைமாகடலி லாழ்ந்தான்."

(திருவிளை—திருமுகம்—10)

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பாணிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க!

"பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

(11-வது திருமுறை—திருமுகப் பாசுரம்—1)

"பாணனிசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்"

(திருஞான-முதற்றிருமுறை-திருக்கோளிலி-9)

னுடைய அழகிய இடம். ஆவணம்—ஓலை. எத்து—தந்திரம். காண்க:—"வந்தியையலைப்பான் வந்த வெத்தனோ விவன்றூ னென்பார்"— (திருவிளை-மண்சும-43)

88. மங்கையர்கைக்கும் — கண்ணுக்கும்

தேனைப் பழித்தமொழிச் சேயிழையார் கைவிழியம்
மானை யுறுந்தொன் மயிலையே—ஆனைந்து
மாடியரு ளத்த னடிபாடுந் தொண்டரினங்
கூடியரு ளத்தன் குடி.

சே இழையார் — நன்றாகச் செய்யப்பட்ட ஆபரணத்தை அணிந்துள்ள மங்கையர்கள். கை அம்மானை உறும்—கை அம்மானை ஆடுதலைப் பொருந்தும். விழி அம்மானை உறும்—கண் அழகிய மானினது போன்றிருக்கும். தொன் மயிலை—பழமையான மயிலை. ஆன் ஐந்து பஞ்சகவ்வியம் (விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட கோசலம், கோமயம், தயிர், நெய், பால் என்பவைகளின் தொகுதி.) ஆடி—அபிஷேகம் கொண்டு. கூடியர் உள் அத்தன்—ஒன்று கூடுதற்கு நினைக்கும் கடவுள்.

89. வருணனை

தேமனெனப் பாகவதர் சேர்கொடிமே லாகமத்தான்
மாமனேயே நாட்டு மயிலையே—சோமக்
கணித்தரங்கட் டங்கத்தார் கற்பகத்தாள் சேர்முக்
கணித்தரங்கட் டங்கத்தார் காப்பு.

பாகவதர் ஆகமத்தான் மா மன் ஐ ஏ தேமன் என நாட்டும்—விஷ்ணு பக்தர்கள் பாஞ்சராத்ர ஆகமங்களால்

லக்ஷ்மி நாயகனுகிய ஸ்ரீமந் நாராயணனையே தேவ தேவன் என உறுதிப்படுத்தும். சேர்கொடிமேல் ஆகமத்தான் மா மனையே நாட்டும் — (இடபம) சேர்ந்த துகிற்கொடியினை ஆகம விதிப்பிரகாரம் பெரிய மாடங்களிலே மேலாக ஏற்றுகின்ற. சோம க(ண்)ணி தரம் கட்டங்கம்—சந்திரனுகிய கண்ணியைச் சூடிய தலையினையும் கட்டங்கம் என்னும் ஆயுதத்தையும். கற்பகத்தாள் — கற்பகாம்பாள் (தலத்துத் தேவியார் பெயர்). நித்தர்—என்றும் அழிவில்லாதவர். கட்டு அம் அங்கத்தார் — கட்டழகினையுடைய திருமேனியை உடையவர்.

90.

உள்ளமுடை யோர்களு முண்டியறிந் துண்போரும்
வள்ளியநா மென்றுர் மயிலையே—வெள்ளிமலை
ஐயாற்றிற் காட்டினர் ஆளுடைய மன்னவர்க்கிச்
சையாற்றிற் காட்டினர் சார்பு.

(1) உள்ளம் உடையோர்கள் வள்ளியம் நாம் என்று ஆர்—ஊக்கம் உடையவர்கள் நாம் வண்மையுடையோம் என்று பொருந்துகின்ற. (2) உண்டி அறிந்து உண்போர் வள்ளியம் நா மென்று ஆர்—உணவு உண்ணும் விதியினை அறிந்து உண்பவர்கள் மிளகினை நாவால் மென்று தின்கின்ற. ஆளுடை மன்னவர்க்கு ஐயாற்றில் வெள்ளிமலை காட்டினர்—திருநாவுக்கரசு சுவாமிகட்குத் திருவையாற்றில் கயிலைமலையில் தானும் உமாதேவியாரும் உடனிருக்கும் காட்சியைக் காட்டியவர். இச்சை ஆற்றிற்கு ஆட்டினர்—ஒரு பாண்டியன் விருப்பத்தின் வழியே கால் மாறி ஆடியவர்.

91. பாடன்மகளிர் கைக்கும்—பொக்கிஷ அறைக்கும்

பாடன் மகளிர்கைப் பங்கயமுஞ் சாளிகையும்
மாடக மாரு மயிலேயே—கூடுநுதல்
மத்திகைக் கொண்டுவந்தான் மாரன்வின் நேருமை
கத்திகைக் கொண்டுவந்தான் காப்பு. முன்

கைப்பங்கயம் — கையாகிய தாமரை (உருவகம்). சாளிகை—பொக்கிஷ அறை. (1) மாடகம் ஆரும்—யாழ் உறுப்புக்களில் ஒன்ருகிய முறுக்காணி, பொருந்துகின்ற. (2) மாடு அகம் ஆரும்—செல்வம் தன்னிடம் நிறைகின்ற. கூடு நுதல் மத்தி கை கொண்டு உவந்தான் மாரன் வில் நேர் — ஒன்றுகூடிய புருவங்கள், மத்திய பாகத்தைக் கையாற் பற்றியுள்ள சந்தோஷத்தோடு கூடிய மன்மதன் வில்லுக்கு ஒப்பான (இவ்வுபமானம் வடமொழி நூலிற் கண்டது). உமை முன் கத்திகை கொண்டு வந்தான்— உமாதேவியார் (அங்கயற்கண்ணி) முன் யுத்தத்திற்கு வரும்பொழுது இடபக்கொடியுடன் வந்த சிவபெருமான். கத்திகை — துகிற்கொடி.

92. கிள்ளையொலிக்கும்—காகவொலிக்கும்.

வீருகக் கிள்ளையொடு வேம்புவிழை காகமவை
மாரு தொலிக்கு மயிலேயே—ஆருறுந்
தாண்டியரு ளுற்ருர் தமதச்சந் தீர்ப்பாள்சீர்
வேண்டியரு ளுற்ருர் விழைவு.

மாருது—மாறுபடாமல். ஆருறு — தொண்ணூற்ருறு தத்துவங்கள். அல்லது துவாதசாந்தம். கிள்ளை—கிளி. அச்சம் தீர்ப்பாள் சிர் வேண்டியர் உள் உற்ருர் —

எல்லா அச்சங்களையும் நீக்கியருளும் ஸ்ரீராஜராஜேசுவரி யின் புகழை விரும்பியவர்களுக்குளெல்லாம் சிறந்தவரா கிய சிவபெருமான்.

93. ஞானிகட்கும் — மங்கையர் அழகுக்கும்

ஞானநெறி நிற்போரு நல்லா ரெழினலமும்
மான லொழிக்கு மயிலையே—தேனமர்
கொன்றைத் தருவார் குலவுசடை யாயெனவுங்
கொன்றைத் தருவா ருவப்பு.

நல்லார் எழில் நலம்—மங்கையர் அழகின் மேன்மை. (1) மானல் ஒழிக்கும் — மயக்கத்தைப் போக்குகின்ற. (2) மானல் ஒழிக்கும்—ஒப்பாகப் பெறுதலைத் தவிர்க்கின்ற. தேன் அமர் கொன்றை தரு ஆர் குலவு சடையாய்—தேன் பொருந்திய கொன்றை விருக்ஷத்திற்கு ஒப்பாக விளங்கு கின்ற சடையை உடையவனே. அங்கு ஒன்றை—அறியா தார் மிகச் சேய்மைக்கண் உளதென நினைப்பதும் அறிந் தார் தங்கண்ணே அநுபவிப்பதுமாகிய முத்திநிலை. தரு வார்—அளிப்பவர்.

94. கலாநிலயத்திற்கும்—நாதசித்தர்கட்கும்.

நாமுதல்வி வாழ்மனையும் நாதசித்தர் பாலுமணி
மாமுதல் மன்னு மயிலையே—ஆமுதலாம்
அன்பங் களைவார்க் கமுதீந் தவர்பசித்
துன்பங் களைவார்தஞ் சூழல்.

நாமுதல்வி—ஸரஸ்வதிதேவி. நாதசித்தர்—ஸ்ரீ வித் யையின் பரமாரஹஸ்யத்தை அபரோக்ஷமாக அறிந்துள்ள

மகான்கள். பால்—இடத்தில். (1) மணி மா முதல் மன்னும்—இரத்தினங்களும் செல்வத்தின் முதல்வியாகிய இலக்குமியும் நிலைத்திருக்கின்ற. அணி மா முதல்—அலங்கரிக்கின்ற திரு முதலாகிய அஷ்டலக்ஷ்மிகள். (2) அணி மா முதல்—அணிமா முதலாகிய அஷ்ட ஸித்திகள். அஷ்டலக்ஷ்மிகள்:— தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, சௌரிய லக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, இராச்சிய லக்ஷ்மி, வீரலக்ஷ்மி, பாக்கியலக்ஷ்மி என்பவர்கள். அஷ்ட ஸித்திகளாவன:—

அணிமா, மகிமா, கரிமா, பிராப்தி. பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. இவற்றின் விளக்கத்தைத் திருவிளையாடற்புராணம்—33-வது அட்டமாசித்தியுபதேசித்த படலத்தும், திருமந்திரத்திலும், பதஞ்சலி யோகசூத்திரத்தும் சித்தர் நூல்களிலும் கண்டுகொள்க. ஆ முதல் ஆம் அன்பு அங்கு அனைவார்க்கு—பசுவாகிய ஜீவர்களுக்கு வாழ்முதலாகிய அன்பு கலந்த அடியார்க்கு (சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் திருநாவுக்கரசு நாயனார்க்கும்). குழல்—இடம்.

95. நவராத்திரிச் சிறப்பு

பாலைக் கிழத்திதிருப் பாரதியார் தங்கணவ
மாலை சிறக்கு மயிலையே—மேலைத்
தவமாற் றினர்தந் தரமேயாந் தாடொழநீள்
பவமாற் றினர்தம் பதி.

பாலைக்கிழத்தி — துர்க்காதேவி. திரு — லக்ஷ்மி. பாரதி—ஸரஸ்வதி. நவமாலை — நவராத்திரி என்னும் உற்சவம். தவம் ஆற்றினர் தம் தாம் ஏ ஆம் தாள்—தவம்

செய்தவர்களுடையே சிரசினிடமே பொருந்துகின்ற பாதத்தைத் தொழ. நீள் பவம் மாற்றினர் — தொல்லை யிரும் பிறவியினை ஒழித்தவர்.

96. நாகணவாய்ப்புள்ளுக்கும் - குமாரக் கடவுளுக்கும்

தண்டமிழாற் சாரிகைநற் ருமமதாற் சேய்மாதர்
வண்டணிகை மேவு மயிலையே—தொண்டர்
புலப்பிலா ஈட்டினர் போற்றத் தருமோர்
உலப்பிலா வீட்டினர் ஊர்.

(1) தண் தமிழால் சாரிகை மாதர் வண்டு அணிகை மேவும் — குளிர்ச்சியுடைய தமிழ் மொழியின்பாலுள்ள விருப்பத்தால் நாகணவாய்ப்புட்கள் மங்கையர்களுடைய வளையல்களை அணிந்துள்ள கைகளில் வந்து-பொருந்தும். (2) நல் தாமம் அதால் சேய் மாதர் வண் தணிகை மேவும் — நல்ல மலை என்னும் காரணத்தால் குமாரக் கடவுள் விரும்பத்தக்க வளப்பமுள்ள தணிகாசலத்தைத் தனக்கு ஏற்ற இடமாக அமரும். புலம்பு இலா ஈட்டினர்—அச்சம் அற்ற மனோ வலிமையை உடையவர்கள். உலப்பு இலா வீட்டினர் — அழிவில்லாத மோக்ஷத்தை உடையவர்.

97.

காதுபசிக் கன்னமதுங் கள்ளச் சமணரையும்
வாதுவென் றிட் டோர்வாழ் மயிலையே—ஓதுதற்கு
வேதங்க டந்தார் விழிப்புருவ நாப்பணுற்றே
நாதங்க டந்தார் நகர்,

காது பசிக்கு அன்னம் வாது என்று இட்டோர்— வருத்துகின்ற பசி நோய்க்கு அன்னமாகிய மருந்தை, 'வா'வென்றழைத்து, வந்த வழி, 'உண்' என்று சொல்லி இட்டவர்களின் சந்ததி. வாழ்—தழைத்து வாழ்கின்ற. கள்ளச்சமணரை வாது வென்றிட்டோர் — வஞ்சச் சம ணரை, மந்திரம், அனல், புனல், வாக்கு என்ற வாது வகைகளில் வென்றவராகிய திருஞானசம்பந்த சுவாமிகள்.

வேதங்கள் தந்தார்—வேதங்களைத் தந்தருளியவர். விழிப் புருவ நாப்பண் உற்று—ஆறுவது ஆதாரமாகிய ஆக்ஞாச்சக்கரத் தின்கண் (சுஷும்நா) என்ற ஸ்தானம்) பொருந்தி, நாப்பண்— மத்தி. நாதம் கடந்தார்—நாததத்துவத்திற்கு அப்பால் உள்ள தாகிய அருட்பெருஞ்ஜோதிப் பிழம்பாகிய "அலகில் சோதி யார்." ஈண்டுக் குமரகுரபர சுவாமிகள் அருள் வாக்கைக் கவனிக்கவும்:—

"தேமேவு — நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த — போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு — அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்—பந்தந் தணந்த பரஞ்சுடராய்"

98. சித்தர் நோக்கிற்கும் – திருப்பள்ளியெழுச்சிக்கும்

ஞானசித்தர் நோக்குற ஞாலத்தர் பள்ளியெழ
வானந் தழைக்கு மயிலையே—தானந்
தவமென்ப தத்தனையுந் தன்னுருவாக் கொண்ட
சிவமென்ப தத்தனையன் சேர்வு.

ஞானசித்தர் நோக்கு உற வானம் (=உலந்தமரம்) தழைக்கும்—ஞான சித்தர்களுடைய அருட்பார்வை தன் மீது பொருந்த உலர்ந்த மரம் துளிர்க்கின்ற, ஞாலத்தர்

பள்ளி எழ வால் நந்து அழைக்கும்—உலக மக்கள் அஞ்ஞானமாகிய பள்ளியினின்றும் விழித்தெழுமாறு வெள்ளிய சங்கம் முழங்குகின்ற. சிவ மென் பதத்தன் ஐயன்= "சிவ" என்னும் மென்மை பொருந்திய மொழியினை யுடையவனுகிய தலைவன். தானதருமங்கள் சிவபெருமானுடைய வடிவங்களாகும்,

99.

பெய்யுமேகம் ஆணையாற் பிஞ்ஞகன்றன் சத்தியதால்
வய்யங்கொண் டூட்டு மயிலையே—மெய்ஞானக்
கண்ணொளி யானுன் கடவுளுண்மை கண்டிடவே
விண்ணொளி யானுன் விருப்பு.

பெய்யுமேகம் பிஞ்ஞகன் தன் ஆணையால் வ(ய்)யங்கொண்டு ஊட்டும் — நீரைப் பொழியும் தன்மையுள்ள மேகம் சிவபெருமானது கட்டளையால் கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள நீரைத்தான் கருவியாககொண்டு அளிக்கும் அல்லது உண்பிக்கும். பிஞ்ஞகன் தன் சத்தியால் வையம் கொண்டு ஊட்டும்—சிவபெருமான் தனது சத்தியைக் கொண்டு உலகத்தைத் தோற்றுவித்து உயிர்கட்கு இருவினைப் பயன்களையும் நுகர்விக்கும்.

100. கடலுக்கும்-கடற்கரைக்கும்-சூரியனுக்கும்

திண்ணமதா யாழியொடு தீரமுஞ்சான் றேனுமரி
வண்ணத்தைக் காட்டு மயிலையே—நண்ணின்
இருப்பரங் குன்றத்தா னீர்வினைதீர்த் தாட்கொள்
திருப்பரங் குன்றத்தான் சேர்வு.

திண்ணம் — நிச்சயம். ஆழி அரி வண்ணத்தைக் காட்டும்—கடலானது ஸ்ரீ மஹாவிஷ்ணுவினது திருமேனியைக் காட்டுகின்றது. (2) தீரம் அரி வள்ளத்தைக்காட்டும்—கடற்கரையானது அலைகளால் அரித்து ஒதுக்கப்பட்ட வளப்பம் பொருந்திய சங்குகளைத் தோற்றுவிக்கின்றது. சான்றோன் அரி வண்ணத்தைக்காட்டும் — உதிக்கின்ற சூரியன் நரசிம்மாவதாரத்தின் தன்மையைக் காட்டுகின்றது. நண்ணின்—நீயே தஞ்சம் என்று அடைந்தால். இரும்பு அரம் குன்றதான் ஈர்வினை தீர்த்து—இரும்பினால் செய்யப்பட்ட அரம் என்னும் ஆயுதமும் அராவும் தன்மையில் கீழ்ப்படுமாறு ஒருவனது உள்ளத்தைப் பிளக்கின்ற (இருள்சேர் இரு) வினையையும் போக்கி. ஆட்கொள் திருபரங்குன்றத்தான்—ஆட்கொள்ளுகின்ற அழகிய குன்றுகள் பலவற்றுள்ளும் மேலான கைலயங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். இச் செய்யுளில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஸ்தலங்களில் ஒன்றாகியும் ஆறுமுகப்பெருமான் படைவீடுகளில் முதலாவதும் ஆகிய பாண்டியநாட்டுத் திருப்பரங்குன்றம் என்னும் க்ஷேத்திரத்தின் பெயரும் அமைந்திருத்தல் திருவருட் குறிப்புடையதாகும்.

வாழ்த்து

வாழி குருவருள் வாழி மறைமுனிவர்
வாழி சுரபியினம் வாழியிறை—வாழியருள்
வாழி யறம் வாழியன்பர் வாழிதமிழ் வாழிதலம்
வாழியிந் நூலும் வளர்ந்து.

முற்றிற்று.

செய்யுள் குறிப்பு

உதிப்பிததல்
கையுள்வரு
டாண்புமலி
வேண்டியவர்.

ஹரிஸமய திவாகரம் பிரஸ், மதுரை:—57.